ओं.

JNÂNA BODHINI

A TAMIL MAGAZINE AND REVIEW.

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION.

EDITOR:

M. S. PURNALINGAM PILLAI, B.A.,

Professor of English, St. Michael's College, Coimbatore.

Vol. VII. No. 3.—March 1904.

CONTENTS.

Madras:

THOMPSON AND CO.,

33, POPHAM'S BROADWAY.

1904.

ஞானபோதினி:—இந்த மாதாந்தப் பத்திரிகையின் வருவனவற்றிற்கு மாத்திரமே பதிலாக அனுப்பப்படும்.

1. விவேக சிந்தாமணி—திருவல்லிக்கேணி, சென்னை.
2. மாதர் மனோரஞ்சனி— ஷை
3. செந்தமிழ்—மதுரை.
4. விவேகபாநு—ஷை.
5. சுதேச மித்திரன்—ஆர்மீனியன் தெரு, சென்னை.
6. இந்து நேசன்—மவுண்டுரோடு, சென்னை.
7. இந்து சாதனம்—யாழ்ப்பாணம்.
8. உதய தாரகை—யாழ்ப்பாணம்.
9. ஆத்ம சம்ரக்ஷிணி—சாத்தூர்.
10. திராவிட வர்த்தமானி—சென்னை.
11. The Madras Christian College Magazine, MADRAS.
12. The Indian Ladies' Magazine, MADRAS.

இதனைப் பத்திராதிபர்களும் பத்திராசிரியர்களும் கவனிப்பார்களாக.

EDITORIAL NOTES.

பத்திராசிரியர் குறிப்புக்கள்.

ஞானபோதினி:—ஏப்பிரல் 30உக்குள் சந்தாத்தொகையை அனுப்பாதவர்களுக்கு மேல் சஞ்சிகை வி. பி. பி-ல் அனுப்பப்படும். சந்தாதாரர்கள் கவனிப்பார்களாக.

சர்வகலாசாலைகள் மசோதா:—இது சட்டமாய்விட்டது. இனிச் சர்வகலாசாலைகளை நடத்தும் சபைகளில் ஆங்கிலேயர் மிகுதியாய்ச் சேருவர், இந்தியர்கள் தொகை குறையும். இந்தியர்கள் வாய்திறக்க இடம் பெறார், ஆங்கிலேயர் மனத்தின்படியே கல்வியும் கல்விச்சாலைகளும் நடைபெறும், ஆங்கிலேய வுபாத்தியாயர்களுக்குக் கொண்டாட்டமே. இது வொன்றே கர்ஸன் பிரபுவின் பெயரைத் தலைமுறை தலைமுறையாக இந்நாட்டில் நிலைபெறச் செய்யும். ரிப்பன் பிரபுவின் பேர் மங்கினாலும் இவர் பேர் மங்காது. இப்பிரபு மற்ற மசோதாக்களும் சட்டமாயின பின்னரே இந்தியாவின் இராஜப்பிரதிநிதிப் பதவியை விட்டு நீங்குவார்போலும்.

பிரசிடேன்சி காலேஜ்:—இதன்கண் உயிர் நூல் (Biology) கற்றுக்கொடுத்த கனம் போரன் டைரெக்டரானபின் அந்த வேலையை அவருக்குதவியாசிரியராயிருந்த **ராமுன்னிமேனன்** பார்த்து வருகின்றனர். இவரையே இந்த வேலையில் காயமாய் நியமித்தால் நலம். இவரும் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் வாசித்துத் தேர்ந்தவரே.

கிறிஸ்டியன் காலேஜ்:—இதில் காலியான தலைமைத் தமிழ்ப் பண்டித வேலைக்கு இந்த வருஷம் ஒருவரும் புதிதாக நியமிக்கப்படுவரென்று தோன்றவில்லை.

ஞான போதினி.

வருஷ சந்தா:— [உள் நாட்டிற்கு] ரூ. 2-8-0. புறதேசங்களுக்கு ரூ. 3-8-0 (ஷில்லிங்கு ஐந்து) சந்தாவைப் பத்திராதிபர் விலாசத்திற்கே அனுப்பவேண்டும்.

ஞானபோதினி

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்—திருக்குறள்.

சம்புடம் VII. | 1904-ம் ௵ மார்ச்சு௴ | சஞ்சிகை 3.

DEWAN BAHADUR KRISHNASWAMI RAO, C. I. E.

திவான்பகதூர் கிருஷ்ணஸ்வாமிராவ், சி. ஐ. இ.

1845ம் ௵ செப்டம்பர் ௴ 15உ இவர் ஜெனனமானபடியால் இவருக்கு இன்னுமொருவருஷத்தில் சஷ்டி பூர்த்தியாகும். சென்ற நாற்பது ஆண்டுகளாக உத்தியோகத்தி லமர்ந்திருந்து இந்த மதிமுடிவில் இவர் திருவாங்கூர் திவான்வேலையினின்று உபகாரச்சம்பளம் பெற்று நீங்குவர்.

இவருடைய வாலிபகாலத்தில் ஆங்கிலப்படிப்பு விசேடித்து விருத்தியாகாதிருந்த போதிலும் இவர் நான்கு வருடங்களில்பிரவேசப் பரீட்சை கொடுத்தனர் என்பதனால் இவருடைய புத்திதீவிரத்தையும் உழைப்பையும்பற்றி விரித்துரைத்தலவசியமன்று. இவர் 1864ம் ௵ அக்டோபரில் நெல்லூர் ஜில்லாக்கோர்ட்டில் ரிக்கார்டுகீப்பர் வேலையிலமர்ந்தனர். இவருக்குக் கிடைத்த முதற்சம்பளம் ரூ. 30. இவர் வேலைத்திறமையை மெச்சி மூன்றாண்டு கழியுமுன்னர் இவருக்கு நூறுரூபாய் சம்பளமுள்ள சிரஸ்தார் வேலை கொடுக்கப்பட்டது. 1870ம் வருஷத்தில் நெல்லூர் ஜில்லாவில் கவாலியென்ற விடத்திற்கு முனிசீபாக நியமனம் பெற்றனர். எந்த முனிசீபு கோர்

ட்டில் வேலை பாக்கி இருந்ததோ அதற்கு இவர் அனுப்பப்பட்டனர். இடந்தோறு மனுப்பப்பட்டபடியால் வேலையிற் கைவந்தது மன்றிப் பலவகை ஜனங்களின் குணதிசயங்களையும் கவனிக்கப் போதுமான சந்தர்ப்பங்கள் நேரிட்டன. கல்வியிற் சிறந்திருந்தாலும் உலக வியலையும் மக்களின் குறைபாடுகளையும் உணர்பவரே உன்னத பதவிக்கு அருகராவார். முனுசிபாயிருந்து சுறுசுறுப்பாய்வேலைபார்த்து வந்ததைப்புகழ்ந்து அக்காலத்தில் உயர்தரநீதிச்சாலைத்தலைவராயிருந்த ஸர் வால்டர் மார்கன் என்பவர் இவரைக்காட்டினும் அதிககாலம் வேலைபார்த்து வந்திருந்த எழுபத்து மூவரையுந்தவிர்த்து மூன்றுவது படியிலிருந்து முதல்தர முனுசிபாக்கினர். பின்னர் இவர் மதுரைக்குவந்தனர். 1876-7ம் வருஷப் பஞ்சத்தில் அநேக குற்றவாளிகளை விசாரணை செய்ய நேர்ந்தபொழுது இவருக்கு முதல் வகுப்புமேஜிஸ்திரட்டு அதிகாரங் கொடுக்கப்பட்டது. 1880ம் ஹுவரை மதுரையில் சப்ஜட்ஜாயிருந்து பின்னர்காக்கிநாடாவிற்கு அனுப்பப்பட்டனர். 1883ம் ஹுத்தில் அந்த வேலை உறுதியாயிற்று. இவர் காக்கிநாடாவிற்குச் சென்றபின் அப்பீல்கேஸ் விசாரணை செய்வதில் அதிக நுட்பமும் விடாமுயற்சியும் காட்டியபடியால் கீழதிகாரிகள் இவரைப் பின்பற்றித் தாங்களும் அரைகுறையாய் வேலை செய்யாமல் முழுமனதுடன் தங் கடமைகளைச் செய்து முடித்தனர். ஆதலால் நியாயவிலாகாவேலை ஜனங்களுக்கு வெகு திருப்திகரமாயிருந்தது. எல்லோருக்கும் நல்லவராயும் சுமுகியாயும் சுறுசுறுப்புள்ளவராயும் தீர்க்கமான ஆலோசனையும் யோக்கியதையும் பொருந்தினவராயும் நீதிபதி வேலை பார்த்தனராதலின் மாகாணவதிபதியாயிருந்த கிராண்டு டப் என்பவர் காக்கிநாடாவில் இவரைச் சிலாகித்துக் கூறினர். "ஜில்லா உத்தியோகஸ்தர்களும் உயர்தர நீதிசாலையதிபர்களும் எப்பொழுதும் உம்மைப் புகழ்ந்து பேசுகின்றனர்."

திருவாங்கூரில் நீதியிலாகாவைச்சீர்திருத்திய திவான் இராம ஐயங்கார் காலத்தில், அதாவது 1884ம் ஆண்டில், கிருஷ்ணஸ்வாமி ராவ் முதல் நீதிபதியாக நியமிக்கப்பெற்றனர். சென்னைக் கவர்மென்ட்டும் இவர் தக்கவரென்று மகாராஜா அவர்களுக்கு அபிப்பிராயங் கொடுத்தனர். அந்த வேலையை அங்கீகரிக்குமுன்னர் இவர் ஜஸ்டிஸ் முத்துஸ்வாமி ஐயருடைய அபிப்பிராயங் கேட்டனர். அவர்

மதிநுட்பமும் தீர்க்க தரிசனமு முள்ளவராதலின் இவருக்கு திவான் வேலை கிடைக்கக் கூடுமென்று மொழிந்தனர். ஸர் பிலிப் ஹச்சின்ஸ் என்பவர் சென்னை உயர்தர நீதிசாலையில் நீதிபதியாகலாமாதலின் திருவாங்கூருக்குப் போகவேண்டாமென்றனர்.

ஆயினும் இந்நாட்டு ராஜாங்கத்தில் ஊழியஞ்செய்வது இந்தியர்களின் இன்றியமையாத கடமையாதலால் ராவ்ஜி முதல்நியாயாதிபதியலுவலை அங்கிகரித்தனர். 1885ம்ஸு சென்னைச்சர்வகலாசாலை சகாவாகத் தெரிந்தெடுக்கப் பெற்றனர். 'மெள்ள வேலை செய்து விரைவில் காரியஞ் சித்திபெற வைப்பதில்' சமர்த்தர் என்ற பெரும் பெயரை இவர் அரசரிடம் பெற்றனர். 1888ம்ஸு 'சென்னையில் ஸ்மால்காஸ் கோர்ட்டு ஜட்ஜி வேலை காலியாயிற்று. அதைப் பெற விருப்பமுடையவரா என்று தெரிய இவருக்கு ஹச்சின்ஸ் கடிதம் விடுத்தனர். இவர் அரசர் மனோபீஷ்டப்படி அந்த வேலை தமக்கு வேண்டாமென்று பதில் விடுத்தனர். இவர் நீதிபதியா யமர்ந்திருந்த காலத்தில் நியாயவிலாகாவில் அநேக சீர்திருத்தங்கள் செய்தனர். முனுசிப் வேலைக்குச்சட்டப் பரீட்சையிற்றேர்ந்த பட்டதாரிகளை நியமித்தனர்; ஷை பட்டதாரிகளையே வக்கீல்களாக அங்கீகாரஞ்செய்ய வுத்தரவளித்தனர். முனுசிப், ஜட்ஜிகளின் சம்பளங்களை அதிகப்படுத்தினர். இரஜாக்காலங்களில் அவசர வேலை பார்க்க தக்க ஏற்பாடு செய்தனர். இரஜா பென்ஷன் இவற்றைப்பற்றி விதிகள் ஏற்படுத்தினர். இராஜாங்கத் தீர்ப்புகளை வெளிநாட்டுகளில் நிறைவேற்றும்படி வேண்டிய வாறு அமைத்தனர். இவருடைய முயற்சிநிறைவேறியது; திவான்பகதூர் பட்டமும் கிடைத்தது. பதின்மூன்று வருஷம் இவ்வித முழைத்த பின்னர் இவர் திவான் வேலைபெற்றனர். ரெவினியூ வேலையில் இவருக்கு அநுபோக மில்லை என்று அநேகர் இவரை இழித்துக் கூறினர். 1898ம்ஸு முதல் நாளது வரை அந்த ரெவினியூ வேலையையும் குறைவின்றிப் பார்த்து வந்தனர். அரசருக்கும் திருப்தி உண்டாயிற்று. சென்ற ஆறு வருடங்களில் இவர் செய்த நன்மைகள் பல. 1891ம்ஸு சட்டசபை வேலைப் பொறுப்பு இவர் தலையில் விழுந்தது. உயர்தர நீதிசாலையின் சட்டமசோதா இவர்திவானன பிற்பாடு கொண்டுவரப்பட்டது. பினல்கோடு சீர்திருத்தம் இவர் எடுத்துக்கொண்ட இரண்டாம் பெருவேலை. இதில் பாதிரிமார்கள் தலை

யிட்டனர். அதன் காரணம், எந்த மதஸ்தரும் சர்க்கார் உத்தரவின் றிச் கோவில்கள் கட்டக்கூடாது என்ற நிபந்தனை அங்கிகாரம் பெற்றது. சட்ட சபையைப்பற்றிய மசோதாவும் முதல் முதலில் இவர் காலத்தில் கொண்டுவரப்பட்டு சட்டமாயிற்று. கைத்தொழிற் படிப்பு விஷயமாய் இவர் செய்துள்ள ஏற்பாடுகள் என்றும் மறக்கற்பாற்றன்று. ஐரோப்பாகண்டத்திற்குக்கல்விகற்றவரை யனுப்பித்தொழிற் படிப்புக் கற்றுவருவதால் ஜப்பான்போன்று திருவாங்கூர் இராஜாங்கமும் தழைக்கத்தக்க ஏற்பாடு செய்தவர் இவரே.

இவையன்றியும் மாதவராவ் சிலையை நாட்டுதற்கு முக்கிய காரணபூதராயிருந்தவரும் இவரேயாம். சமீபகாலத்தில் இந்நாட்டுப்பார்தரக் கல்வியுஞ் சாத்திரமுந்தழைத்தோங்கும்படி பெருமுயற்சி செய்துவரும் அன்னிபெசாண்டு அம்மாளை ஊக்கப்படுத்தும்படி அரசரின் அனுமதியின் பேரில் காசியிலுள்ள “சென்றிரல் காலேஜ்” என்ற கலாசாலைக்கு வருஷந்தோறும் ஐந்நூறு ரூபாய் கொடுக்க ஏற்பாடு செய்தனர்.

இவர் அதிகார தோரணையிலிருந்தாலும் எவரும் இவரைப் பார்த்தனர்; எவரையும் இவர் அன்புடன் நடத்தினர். இதைவிடச் சிறந்த பெயர் யாதுளது?

இவர் இராஜாங்கத்திற்குச் செய்த நன்மைகட்குக் கைம்மாறாக இவருக்கு மகாராஜா அவர்கள் பன்னீராயிர ரூபாய் இனம் கொடுத்தனர் என்று கேள்விப்பட்டு சந்தோஷமடைகின்றோம்.

பத்திராதிபர்.

POWER OF LOVE.

அன்பின் வன்மை. (1)

“அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்பு தோல் போர்த்த வுடம்பு.”

மேலை நாட்டினின் மேவுமுல் (2) வாவெனு
மோல நாப்பணி னுற்றதீ வின்மனன்

(1) Lord Ullin's Daughter with slight modifications. (2) Island Ulva.

கோல மேனியன் கோதையர் சிந்தையுஞ்
சேவி னுண்கணுஞ் சேர்த்துணுந் தோளினன். 1.

இன்னதன்மைய னெல்லையி லன்பினோர்
கன்னி யின்மிசை காதல்வைத் தானவள்
கின்ன ரங்கள்வாழ் கீழுறு நாட்டினி
லன்ன தானஞ்செய் அல்லின்சின் மாமகள். 2.

பூரண சந்திரன் போன்றமு கத்தினள்
ஏரண வும்மன மேய்ந்தந டையினள்
ஓரணு வும்பிற ழாதந லுத்தமி
காரண வன்பினிற் காதல்வைத் தாளரோ. 3.

பெண்ணைப் பெற்றவன் பெண்விருப் பின்படி
கண்ணி யுள்ளவக் காமரு காளைக்குப்
பண்ண லேன்மணம் பாத்திய மில்லென
வெண்ணி யேமனத் தேங்கியி ருக்கையில். 4.

வருந்தி வாலிப னும்வளர் வாலையும்
பொருந்து மன்பினைப் போலுமோர் பாத்தியம்
திருந்தவேறொன்று சேர்ந்திடு மேகொலென்
றிருந்த வாவிருந் தேகினர் மேலையூர் 5.

சென்ற காதலர் சேர்ந்தனர் லாக்கயில் (3)
கன்றி யேபுயல் காற்றும டித்தது
துன்ற லோதியின் சொல்லரு மாமையிற்
சென்ற நெஞ்சினன் தோணிசெ லுத்தியக். 6.

கரையிற்சேர்த்துவன் காசுநான் வேண்டிலன்
புரையி ரோணியிற் போந்திடு மென்றனன்
கரையி லாவன்பிற் காதல ரேறினர்
கரையை யோடம்வி டுத்திடு காலையில். 7.

அல்லின் சின்பரி யாட்கள்வ ரத்தொலி
மெல்லக்கேட்கவு மேவுபின் னோசையென்
றொல்லையில்விட ருக்கினரோடத்தைத்
தொல்லை யூழ்வினை சூழ்ந்திடக் காதலர். 8.

(3) Loch Gayle.

எதுமேயிட்ட யூறிவ ணெய்தினு
மோதை மேவிக் கோங்கிடு காற்புயல்
ஈது நோக்கினு மேய்தறு கட்சினத்
தாதை வாண்முக நோக்கிலன் சத்தியம். 9.

என்று பெண்மணி யிப்படிச் சூளுரைத்
தன்றத் தோணியி லார்ந்திட லும்மகு
தொன்றி லாக்கையி லோடுதன் மேயிற்றல்
ஒன்று முள்ளன்பி னோர்வலி யென்னகொல். 10.

பின்னையப் புயல்காற்றும் பெருத்தது
மன்னனல்லின்சம் வந்தனன் லாக்கரை
யின்ன பேரபா யந்தனிலிருந்துநேர்
வன்ன மாமுக மாக்களைக் கண்டனன். 11.

வேறு.

கண்ணே வருகவிரு கண்மணியே நீவருக
பெண்ணே வருக பிணையே வருகவென
தெண்ணே வருக வெழின்மயிலே நீவருக
பண்ணுவனீ வேட்டாங்கு பாணிக்கிரகணமே. 12.

உள்ளத்தி னீவைத்த வுத்தமனுக் கேயுனைநா
னௌ்ளத் தனையு மிகழா தளிப்பேனல்
மெள்ளப் படவை மீள வலித்திங்கு
கொள்ளை மகிழ்வளித்த கோமளமே நீவருக. 13.

வேறு.

என்ன வாறல்லின்ஸ் எங்கிக் கலுழி னென்
முன்னை யூழ்வலி மாற்றிடலா குங்கொல்
சொன்ன காற்பல மாய்ச்சுழன் றேயடித்
தின்ன காதலர்க் கீருறு வித்ததால். 14.

முற்றும்.

சி. யஸ், சோக்கலிங்கம்பிள்ளை.

MICHAEL THE SHEPHERD.

மைக்கெல் யாதவன்.

நீர் பெரும் பாதையை விட்டுவிலகி ஆர் கலிப்பசுந்தலையாற்றினேரமாய் மேனேக்கி யடியெடுத்து வைப்பிரேல் செங்குத்தான பாதை வழிப்படர

வேண்டும். ஏனெனில் பச்சைப்பசுமையான மலைகள் உமக்கெதிரே தலை தூக்கி நிற்பதை நீர்காண்பீர். அவற்றைக் கண்ணுற்று மலையன்மின்; ஏனென்றால், அம்மலைகளே அவ்வார்கலியாற்றுப் போக்குக்காக வழிதிறந்து விட்டிருக்கின்றன. அன்றியும் நதிப் போக்கால் மலைகளிற் பள்ளத்தாக்கு உண்டாயது. அங்கே குடிபடைகிடையாது. ஆங்குச் செல்பவர் பாறைகளையும் மலைப்பிஞ்சுகளையும் ஆடுகளையும் தலைமேற் பறக்குங் கழுகுகளையுங் காண்பரன்றி மனிதரைக்காணார். அது உண்மையில் முற்றிலுந் தனித்தவிடமே. இப்பள்ளத்தாக்கைப்பற்றி உம்மிடம் யான் பகரேன். ஆனால் நீர் அவ்வழிச் செல்வுழி ஒன்றைப்பார்த்தும் பாராதது போற் போவீரென்றுன்னிப்பகர்ந்தேன். கலியாற்றின் பக்கலில் பருக்கைக் குவியல் சிதறிக்கிடக்கும். அதைப் பற்றிய கதை யொன்றுளது. அது விசித்திர கதையன்றெனினும் மாரிக் காலத்தில் கூதல் காய்வோருக்கும் வேனிற்காலத்தில் மர நிழல் நாடுவோருக்கும் தக்கதன்றென்று நினைக்கிலன். இதுவே நான் முன்னரே பாராட்டிய பள்ளத்தாக்கு. யாதவர் கதைகள்பலவற்றில் முதன்முதலில் அன்னாரைப் பற்றி எனக்கு அறிவுறுத்தியது. நான் யாதவர்மேலன்பு கொண்டது அன்னார் சாமர்த்தியம் பற்றியன்று; அவர்களிருந்து தொழில் புரிந்த கழனி கற்குன்றங்கள் பற்றியே. புத்தகப்படிப்பில் கவனமற்ற சிறுவனாயினும் இயற்கைப் பொருள்களி னின்பக்கவற்சியால் இயற்கையமைப்பின் வல்லமையுணர்ந் தேனாதலின் என்ன தல்லாதனவற்றிற்காக வுணரவும், மனிதன், மனிதவுணர்ச்சி, மனிதவாயுள் இவற்றைப்பற்றி எத்துணை நிறைவிலதேனும் மனம் போனவாறு நினைக்கவும் இக்கதை தூண்டிற்று. இது நாகரீகமற்ற எளியவர்கதை யெனினும் இதை நான் கூறுவது கபடமற்ற சிற்சிலர் இன்பம் பெறுதற் பொருட்டு மட்டுமன்று; நான் மறைந்த பின்னர் இப்பருப்பதங்களினிடையில் வந்துறும் என்னையொத்த இளங்கவிகளின் மேலுள்ள ஆர்வமிகுதியின் நிமித்தமே.

புல்லேரிப் பள்ளத்தின் காடடர்ந்த பக்கத்தினோரத்தில் ஒரு யாதவன் குடியிருந்தான். அவன் பெயர் மைக்கல். அவன் வயதில் முதிர்ந்தவனாயினும் மனத்திடங்கொண்டவன், கைகால் வலுப்பெற்றவன். வாலிப முதல் விருத்தாப்பியம்வரை அவனுடைய வுடற்கட்டு அபூர்வமான பலங்கொண்டதாயிருந்தது. அவன் தீவிர புத்தியுள்ளான், உணர்ச்சி மிகுந்துள்ளான், பேரவாவில்லான், எவ்வேலைகளுக்கு மிசைந்தவன், மேய்த்தற்றொழிலில் மற்றவரைக்காட்டினும் சுறுசுறுப்புங் கவனமுமுள்ளான். ஆதலால் மந்த மாருத முதல் புயற்காற்று ஈறாகவுள்ள காற்றுகளின் தன்மையை அனுபவத்திலறிந்தவன், மற்றிடையர் கவனியாத போழ்தும் தென் திசைப்புயற்காற்று வருமுன்னரே தூரத்திலுள்ள உயர் நிலக் குன்றங்களினின்று உண்டாகுங்

தோல்துருத்திச் சத்தம் போன்ற பிலகீதம் இவன்காதிற்படும். இவ்வாறு எச்சரிக்கப்பட்ட இடையன் தன்னுடைய மந்தையைப்பற்றி நினைத்து, 'எனக்கு வேலை கண்டு பிடிக்கின்றன இப்புயல்கள்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொள்வான். புக்கிடந்தேடும்படி பிரயாணியைத் துரத்தும் புயற்காற்று அடிக்கும்பொழுது இவனை மலைகளினுச்சிகளிற் தவறாது காணலாம் மலைச்சிகரங்களில் தன்னைப்பற்றி விடும் மஞ்சுகள் மூடுபனிகளினிடையில் இவன் தன்னந்தனியனாய்த் தென்படுவான். இவ்வாறாக இவனுக்கு எண்பதாம் வயதுங்கழிந்தது. பசிய பள்ளத்தாக்குகளும் பாறைகளும் ஓடைகளும் யாதவன் மனத்தைக் கவராதவையென்று நினைப்பவன் பெருந்தவறு செய்பவனாவான். எல்லோருக்கும் பொதுவான வாயுவையளித்து களிக்கச்செய்யுங் கழனிகளும், அடிக்கடி சுறு சுறுப்பாய்த்தான் ஏறினவும், தன் மனத்தில் கடுவேலை, தந்திரம், தைரியம், சந்தோஷம், பயம் இவற்றை யுண்டாக்கிய பற்பல சர்தர்ப்பங்களை மனத்திற் பதியச் செய்தனவும், தனக்கு நல்வழியில் உறுதியான இலாபமும் தன் செயல்களுக்கு நன்றியும் கிடைக்குமென்றெண்ணி வாயில்லாப் பிராணிகளைத் தான் காப்பாற்றி இரை கொடுத்துத் தொழுவிலடைத்த ஞாபகத்தைப் புத்தகம்போன்று காப்பாற்றியனவும் மான மலைகளும், தன் சீவனினும் தன்னுடைய சொந்த இரத்தத்தினுமதிகமாக மதிக்கப்பெற்ற இம்மலைகளும் வயல்களும் இவனுடைய அன்பை வலுக்கப்பற்றி இவனுக்கு உயிரின்பமான இயற்கையன்பாலுண்டாகும்இன்பவுணர்ச்சியாயிருந்தன. இவன் வாழ் நாட்களைபிரமசாரியாகக்ழிக்கவில்லை. இவன் மனைவி அழகுவாய்ந்த மாது; அவள் தனக்கு இருபதுவயது குறைந்தவளாயினும் கிழவியே. எப்பொழுதுந் தன் வீட்டுக்கவனமேயுடைய இவள் சுறுசுறுப்பானவள். இவள் வீட்டில் பழைய மாதிரியான இரண்டு சக்கரங்களிருந்தன. அவற்றில் பெரியது கம்பள நூல் நூற்பதற்கும், சிறியது சணல் பிரிவிடுவதற்கும் உபயோகமானது. ஒன்று ஓய்ந்தால் மற்றொன்று வேலையிலிருக்கும். இவர்களுடன் வீட்டிலிருந்தது இவர்களுக்குப்பிறந்த ஒரு குழந்தையே. இவன் பிறந்தகாலம் மைக்கெல் தனக்குக்கடந்த வருடங்களைக் கணக்கிட்டுத் தான் வயோதிகப்பருவம் அடைந்ததாக நினைக்க வாரம்பித்ததே. இதை யாதவர் **துழியிலோரடியிடுங்** காலம் என்று கூறுவர். இந்த ஒரே மகனும் புயல்களிலடிப்பட்ட இரண்டு பலமான ஆட்டுக்கிடை நாய்களும் இவர்களுடைய குடித்தனமாயின. இந்நாய்களிலொன்று மதிப்புக் கடங்காத விலையுள்ளது. இக்குடி ஓயாத வேலைசெய்து வந்தபடியால் பள்ளத்தாக்கெங்கும் இது ஓய்வில்லா வேலையைக் குறிக்கும் முதுமொழியாயிற்றென்று நான் சத்தியமாய்ச் சொல்வேன். பொழுது பட்டவுடன் தகப்பனும் மகனும் வெளியே செய்தவேலையை யொழித்து வீடு வந்தடைந்தபின்னரும்' துப்புரவான இராப்போசன மேசையிடம் போய் ஒவ்வொருவரும் தமக்குரிய

கீரையுடனுங் கடைந்த பாலுடனும் தினைப்பணியாரங்களும்வீட்டிற் செய்த பாற்கட்டிகளும் அடுக்கியுள்ள கூடையைச் சுற்றியிருந்த காலந்தவிர மற்றெந் நேரத்திலும் இவர்களுடைய வேலை ஒழிந்திலது. போசன முடிந்ததும் உலுக்கனும் (இதுவே மகன் பெயராம்) அவன் விருத்தாப்பியப் பிதாவும் கூதல் நெருப்பினருகே யிருந்து இலகுவாகச் செய்யக்கூடிய வேலைகளைச் செய்தனர். சில வேளை மனைவியின் கதிருக்குக் கம்பள நூல் திரித்தார். அல்லாவிடில் அரிவாள், அடிகம்பு, கத்தி, வேறு வீடு கழனிகளுக் குபயோக மாகும் கருவிகளைப் பழுது பார்த்தார்.

பகலொளி மங்கியதும் எல்லாவற்றிலும் வெகுகால முபயோகமான பழையவிளக்கொன்றை இல்லாள் பாவுகட்டையினின்று தொங்கவைத்தனள். அது புகைக் குழாயின் கீழடியைத் தொட்டுக்கொண்டிருந்தது. ஏனெனில், நம்முடைய புராதன நாகரீகமற்ற பட்டி தொட்டி பாதிரியிலமைக்கப் பெற்ற புகைக்குழாயின் கீழடி சுவரிலிருந்து வெகுதூரந் துருத்திக்கொண்டு விரிந்து பரந்திருந்தது. இந்த விளக்கு தினந்தோறும் மாலைவராமுன் ஏற்றப் பட்டு விடிந்து வெகு நேரம் வரை எரிந்தது. இதுவே இருவரும் வாழ்ந்து வந்த வருடங்கட்கு அத்தாட்சியாம். இருவரும் உல்லாசத்தோடும் முக மலர்ச்சியோடுங் காலங்கழியாதபோதிலும் நம்பிக்கையுடன் சுறு சுறுப்பாய் வாழ்ந்து வந்தனர். இவ்விதமாக உலுக்கனுக்குப் பதினெட்டா மாண்டு வந்துற்றவரை காலம் போயது. ஒவ்வொரு இரவிலும் தகப்பனும் மகனும் விளக்கு வெளிச்சத்தில் வேலை செய்தனர். மனைவியோ அக்காலமெல்லாம் நூல்நூற்றனள். இவள் நூல்நூற்குஞ் சக்கரங்களின் ஒலியால் இவர்கள் குடிசை வேனிற் காலத்தில் ஈக்கள் ஒலித்துக்கூடும் தேன் கூடுபோன்று விளங்கியது. இவர்கள் வீட்டு விளக்கொளி அயற்பக்க மெங்கும் பேர்பெற் றிருந்தது. அன்றியும் அது குடும்பத்தார் சுறுசுறுப்பாய் மிதமான வாழ்வுவாழ்ந்து வந்தனரென்பதற்கு எல்லோருமறிந்த வோர் அறிகுறியாம். இவர்கள் குடிசை உயர் நிலத்தில் தனியே யமைக்கப்பட்டிருந்தபடியால் வடக்கிலுந் தெற்கிலும் தூரத்திலுள்ள **இன்பப்பள்ளம் பேருமலை**யுச்சி வரையும் மேற் றிசையில் புல்லேரிக் கணித்தாயுள்ள கிராமம் வரையும் தெரிந்தது. குறித்த நேரத்தில் விளக்கு ஏற்றப்பட்டு எரிந்தபடியாலும் வெகு தூரம் வரை இந்தக்குடிசை கண்ணுக்குத் தோன்றியபடியாலும் அந்த வட்டணிக்கையிலுள்ள முதியோரிளைஞரனைவராலும் **மாலைவெள்ளி** என்று அழைக்கப் பட்டு வந்தது.

அநேக சம்வற்சரம் கூடி வாழ்ந்தபடியால் யாதவன் தன்னைப் போன்று தன் மனைவியையும் சீராட்டிப் பாராட்டியிருப்பானென்பது திண்ணம். ஆயினும் விருத்தாப்பியத்திற் பிறந்த தன் மகன் பேரில் மைக்கல் மிகுந்த வன்பு பாராட்டினன். இதற்குக் காரணம் மனித சுபாவத்திலமைந்த குருட்

டன்பு எனப்படும் புத்திரவாஞ்சையா யிருக்கலாம். மற்றெல்லாப் பேற்றிலுஞ் சிறந்த புத்திரன் ஒழுங்காய் முன்னுக்கு வருவானென்ற நம்பிக்கையும் வருங்காலத்தில் அவனடையக்கூடிய சிறப்பின் முன் ஞாபகங்களும் பிள்ளையின் சுபாவத்தால் எதிர் பார்த்தபடி நடைபெறாத பட்சத்திலுண்டாகும் மனவருத்தங்களும் அதன் காரணங்களாயிருக்கலாம். இவை போல்வன வேறு காரணங்களாலும், கிழவன் பூவுலகில் தானறிந்த பொருளனைத்திலும் விழுமியதாகக் கருதினன். தன்னொரே யருமை மகன்மேல் அவன் வைத்த பாசத்திற்குக் கணக்கில்லை. அவனைத் தன் இருதயமாகவும் இருதய வின்பமாகவும் மதித்தான். ஏனெனில், கிழட்டு மைக்கல்உலுக்கன் குழவியாயிருந்த பருவத்தில் அவனை அடிக்கடி கையிற்றூக்கிப் பெண்பிள்ளைகள் போன்று அவனுக்கு ஊழியஞ்செய்து வந்தனன். இங்ஙனஞ்செய்தது பெற்றோர்களின் வழக்கப்படி சந்தோஷமாய்க் காலங்கழித்தற் பொருட்டன்று; பொறுமையான மனத்தோடு பிரியமாய் சிஸ்ருஷைசெய்ய மனத்தைக்குவித்தல் நிமித்தமே. மைக்கல் அடிக்கடி தாய் போன்று பையன் தொட்டிலைப் பிடித்து ஆட்டினன்.

பின்னர், உலுக்கன் பையனுடை தரிக்குமுன் மைக்கெல் வளையாத நிமிர்ந்த மனமுடையவனாயினும் வீட்டில் வேலை செய்த போழ்தும், தலைவாயிலருகேநின்ற பெரிய முதிர்ந்த ஓர் மரத்தினடியில் தான் யாதவப்பீடத்தில் வீற்றிருந்து ஆட்டின் மயிரைக் கத்தரித்தபோழ்தும் பாச மிகுதியால் சிறுவனைத் தன்னெதிரே வைத்துக்கொண்டனன். அந்த மரத்தின் நிழல் பெரிதாயிருந்தபடியால் ஆட்டு மயிர் வனைஞர்மேல் வெய்யில் படாதிருக்கத்தக்கதாயிருந்தது. இதுகாரணம் பற்றியே கிராமாந்தர பாஷையில் இந்த மரத்திற்கு **கத்திரிமரம்** என்ற பெயர் வழங்கியது. இதே பெயரால் அது இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றது.

அங்கே அதன் நிழலில் இருவரும் தங்களைச்சுற்றி அனேகருடன் உட்கார்ந்து சந்தோஷமாயுஞ் சுறுசுறுப்பாயும் வேலைசெய்து வந்தபொழுது பையன் மயிர் வனையப்படும் ஆடுகளின் கால்களைப்பிடித்து இழுத்துத் தொந்தரவு செய்தாலும் கைகொட்டி யவற்றைப் பயப்படச்செய்தாலும் அவனை வெடுவெடுக்காமல் இங்கிதமாய்ப்பார்த்துத் திருத்தியுங்கடிந்தும் அவனை நல்வழியில் வளர்த்துவந்தனன்.

கடவுள் கிருபையால் புத்திரன் ஐந்து வயதில் பாலப்பருவம் அடைந்தனன்; உடற்சுகமும் இருகன்னங்களிலும் நீங்காத செந்நிறப் பொட்டுக்களையுமுடையவனாயிருந்தனன். மழை காலத்தில் மைக்கெல் சிறுமரச் சோலையுட் சென்று ஒரு சிறிய கொம்பைத் தன் கையால் வெட்டி அதற்கு இருப்புப்பிடி பிடித்து (இரும்பு வளையங்கள் போட்டு) எவ்விதத்திலும் அதை முற்றிலும் நேர்த்தியான இடையன் தடியாகச் செய்து அதைப் பை

யனிடங்கொடுத்தனன். இத்துடன் அவனை அடிக்கடி வாசலிலும் வேலித் துவாரங்களிலும்ஆடுகளை நிறுத்தவுந் திருப்பவுங்காவற்காரனுக வமர்த்தினன். சிறு வயதிலே இந்த அலுவலுக்கு அழைக்கப்பட்ட படியால் விளையாட்டுத் தனமுள்ள சிறுவன் சில சமயங்களில் வேலைக்கு இடையூறும் சில சம யங்களில் வேலைக்கு உதவியாயும் இருந்திருப்பானென்று நீவிரே யூகிக்க லாம். இடையூறு யிருந்தபடியால், சிறுவன் தடிகொண்டு கூவியும் பார்த் துப் பயமுறுத்தியும் தன் வேலையிற் சிறிதும் பாக்கிபோடாமற் செய்தும், அவனைத் தகப்பன் தக்கவாறு எப்பொழுதும் புகழவில்லை யென்று நினைக் கிறேன்.

(இன்னும் வரும்)

சங்கரநாராயணன்.

CHELVI AMMAN VIRUTTHAM.
செல்வியம்மன் விருத்தம்.

திருவருள் சுரந்த செல்வியி னடிபரவக்
கயமுகப் பரமன் காப்பு.

கருணை பெருகிய காமாரி* செல்விளைய
இப†முகப் பாலன் காப்பு

அருள்நிறை செல்வி யிணையடி பாட
கருணைக் கணபதி காப்புக் காப்பு

திருவளர வளர்கிரண மணிமகுட மாயிரந்
 தினகர ருதித்த தெனவும்
திலதம் பொறித்துவளர் பிறையொன் றுளத்துநுதல்
 செருவிற் குனித்த புருவமும்
இருவரி பரந்துகிளர் குழையெதிர் நடந்து சிறி
 யற்கருள் சுரந்தவிழியும்
இன்னருள் நிறைந்தசந் திரானனமு மெளியேற்
 கிரங்கிநவி லினிய மொழியும்
பருவருரைக் கொங்கையுஞ் செங்கையும் பட்டுடைப்
 பாதமல ரழகு முடையாய்
பரிபூர ணீசர்புரம் வாழ் பத்தி யூரவர்கள்
 கொண்டாடு பரமேஸ்வரி

---

* சிவன். † யானை.

மருவலர்* கரியேறு மதனனுமை யொருபாக
 வள்ளல்பணி கொண்ட வுமையே
வளர்வீர பாண்டியச் செல்வியே கருணை பொழி
 வடிவழகு கல்யாணியே. (1)

சீலபெற்ற நாற்பத்து முக்கோண நாயகி
 நேமிசிவ காமி வாமி
சிருதர்கிளை வேரோ டறுத்தகரு ணாகரி
 நேயரருள் பரிபா லினி
துலைபெற்ற சமனுற்ற சுந்தரி யந்தரி
 துங்கத் † திரிசூலி நீலி

‡ தோம்மறுத் துயரறத்துரிசறத் திருவருள்
 சுரந்தளித் தாண்ட குமரி
அலைவற்ற புகழ்பெற்ற பரிபூர ணிசார்புரம்
 வாரணி பரி பாலினி
யருமறைக் காகிய வூரவர்கள் கொண்டாட
 ஆனந்தமான பரையே
மலைபெற்ற மாணிக்க வவ்வியே தமியேன் சொல்
 மாலையா பரணவுமையே
வளர்வீர பாண்டியச் செல்வியே கருணைபொழி
 வடிவழகு கல்யா ணியே. (2)

பங்கயத் தவிசுவாழ யனும்ப யோததிப்
 பள்ளிவாழ் வைகுந்தனும்
பானுவுஞ் சோமனுந் திருமனும் வன்னியும்
 பையரவ மோ ரிரண்டும்
சுங்கவன் மங்கவன் பண்டிதன் பங்கவன்
 சுரர்குருவ னலகை யாளி
தொன்முனிவர் கணநாதர் தேவர்கிங் கரரிஷிகள்
 தோன்றுதெய் வேந்திரன் முதலோ
ரெங்கும் பரந்தடி பணிந்துசின் குற்றேவ
 லென்னென் றிரந்து போற்ற
யினிதாக வென்மனச் சிம்மாசனத்தினி
 லிருந்துவிளை யாடுதிருவே
மங்கையர்க் கரசியே யூரவர்கள் கொண்டாடு
 வள ரங்கயற் கணு மையே

* பகைவர். † வெற்றி. ‡ தண்டம்.

வளர்வீர பாண்டியச்செல்வியே கருணைபொழி
வடிவழகு கல்யா ணியே. (3)

பரமனுக் கிறைவனைக் குருபரக் கடவுளைப்
பன்னிருகை யறுமுகவனை
பாலனைச் சூராதி சூரசங் காரனைப்
பன்னுகுல வீரரரசை
குரவுமகள் மருகனை சரவண பவேசனை
குழந்தைவடி வேல் முருகனை
கோடிசூ ரியரொளி விளங்கத் தனித்தழகு
கொஞ்சுவடி வேற் கந்தனை
அரகரா குமரனென நீ பெற்ற வாண்மையை
யாராலும் நவிலவரிதே
அமலையே விமலையேயூரவர்கள் கொண்டாட
வருள் பெருகி நின்ற வரசே
மரகதத் திருமால் சகோதரா னந்தியே
வரையரச னீன்ற வுமையே
வளர்வீர பாண்டியச் செல்வியே கருணைபொழி
வடிவழகு கல்யா ணியே. (4)

வேதாவும் வேதநீ வேதமறை யோதநீ
வேதத்தி னுட்பொருளுநீ
வெளியுநீ இருளுநீ விண்ணுநீ மண்ணுநீ
மேலும் நீ கீழும் நீயே
ஓதார்த வோதநீ யுண்மைநீ யின்மைநீ
ஓரட்சரப் பொருளுநீ
யுறவுநீ யுறுதிநீ யுள்ளம்நீ கள்ளன்நீ
யுருவுநீ யருவு நீயே
பூதாதி பூதநீ பூதவே தாளநீ
பூதகண நாயகியுநீ
பூலோக நாயகி யூரவர்கள் கொண்டாடு
போதாகி போத வொளியே
மாதா பிதாவுநீ மாதர்கட் கரசுநீ
மறையாகி யான வுமையே
வளர்வீர பாண்டியச் செல்வியே கருணைபொழி
வடிவழகு கல்யா ணியே. (5)

தேத்துழாய்க் குரிசிலுக் கிளையளென் றோதுவாய்
சிவனுக்கு மூப்பி யென்பாய்

சிந்தித்த பேர்க்கருள் பெருக்குவா யன்பர்தஞ்
சிந்தைகுடி யா யிருப்பாய்
யேத்துமிட மெங்குநானென்குவா யாயிரத்
தெட் டண்டமும் படைப்பாய்
இமைக்குமுன் னழிக்குவா யேகநா னென்குவாய்
ஈசனையும் வேலை கொள்வாய்
காத்துரட் சிக்குவாய் வேட்டதுந் தருகுவாய்
கண்ணின்மணி யாயிருப்பாய்
காரணி யூரவர்கள் கொண்டாடு பூரணி
கருணையுரு வான தேவி
வாய்த்ததமிழ் மாலையா பரணியே யென்னுவில்
வாழ்ந்தர சிருந்த வுமையே
வளர்வீர பாண்டியச் செல்வியே கருணைபொழி
வடிவழகு கல்யா ணியே. (6)

பைரவி வைணவி பாரதி பார்ப்பதி
பத்மா சனத்து நீலி
பன்னீ ரிதற்குள் வளர் பகவதி நவகோண
பதியர சிருந்த தேவி
செயிறரச் சிறுபிள்ளை யாகிவே தியர்கள்குல
தீபமென நின்ற வொளியே
சிறியேங்கள் செய்பிழை பொறுத்துத் தடுத்தாண்ட
செல்வியே சிவ சோதியே
குயிலைப் பழித்தமொழி வல்லியே கருணைகுதி
கொண்டமர கதவல்லியே
கோமதி யூரவர்கள் கொண்டாட நின்றதொரு
கோலா கலக்குமரியே
வயிரவனை வலியமேல் வாசல்ப்ர தானிக்க
மாணிக்க மென்ற வுமையே
வளர் வீரபாண்டியச் செல்வியே கருணைபொழி
வடிவழகு கல்யா ணியே. (7)

அணிபெற்ற வட்டசித் துக்கள்விளை யாடுவா
யாசுமதுரம் படிப்பாய்
ஆனவிஸ் தாரகவி சித்ரகவி பாடுவா
யட்டமா நாக மாவாய்
பணிவுற்ற பஞ்ச சய னத்துளுறை வாய் பொறிகள்
பஞ்ச பூதங்க ளாவாய்

பரசமய மறுசமய மாகுவாய் மிக்கதோர்
பாடாண்டத் துறை யாகுவாய்
திணிபெற்ற வெட்டுமலை யெழுமேக மாகுவாய்
திசையானை யாகிநிறைவாய்
தீபமே யூரவர்கள் கொண்டாடுசெல்வியே
சிறியேற் கிரங்கு மரசே
மணிமந்த்ர வாதியே முப்பத்திரண்டறம்
வளர்த்துரட் சித்த வுமையே
வளர்வீர பாண்டியச் செல்வியே கருணைபொழி
வடிவழகு கல்யாணியே. (8)

வில்லியே வேலா யுதத்தியே யெழுகுண
விசாலியே யெழு வாரியே
விமலியே நவபுண்ய வமதியே ஏகாந்த
மேருகிரி வாழ் கருணியே
வல்லியே யுபவிடத நுட்பமே தமிழொடு
வடநூல் நிறைந்த பொருளே
வாணியே கவி வாணர்கட் கமுதமே
மன்றில்நட மாடு கொடியே
பில்லிபேய் துஷ்டப் பிசாசுவஞ் சனைகளைப்
பிரியா தெரித்த தழலே
பெருமைபெரு பரிபூர ணிசர்புர மூரவர்கள்
பேறுபெற நின்ற திருவே
வல்லியே முப்பத்து முக்கோடி தேவர்தொழ
வந்தா சிருந்த வுமையே
வளர்வீர பாண்டியச் செல்வியே கருணைபொழி
வடிவழகு கல்யாணியே. (9)

பூமேவு சதுமுகச் சிருஷ்டியால் வந்தவுடல்
புகழ்வாச லொன் பதுமுதற்
பொங்கிய வியாதிமூன் றீருன தத்துவம்
புகழ்ந்ததொண் ணூற் ருறையுந்
தங்குமெய்ஞ் ஞானக்கினி யாலெரித் தெங்கு நிறை
தசவாய் புகட்டி யேக
மாமேவு கச்சையுங் கட்டியா னந்தமெனு
முகமதுவு முண்டு மோக
மானென முகிழ்த்தமுங் கொண்டுமேல் வீடுபெற
வடியேற் கிரங்கு மரசே

மாமேவு கிர்கயிலை யெட்டெட்டு வான்கலை
வளர்ந்தர சிருந்த வுமையே
வளர்வீர பாண்டியச் செல்வியே கருணைபொழி
வடிவழகு கல்யா ணியே, (10)

கவிராஜ சுப்பிரமணிய பிள்ளை.

CHINNATHAMBI - III.
சின்னத்தம்பி.

அதிகாரம். 5-கனவு.

உலகமே கனவு. அதன் வாழ்வோ கனவினுங்கனவு. இன்றைக்கிருப்போரை நாளைக்குக் காணோம். இந்த நிலைமைதான் உலகின் சிறப்பு. நமது தேகமோ கசுபாண்டக்கூண்டு. அதன் அழகு அழகல்ல, அது சாசுவதமுமல்ல, சுத்தப்பொய். இவ்வாறன்றோ துறவிகள், கூறுகின்றார்கள் ! நம் போலியர்க்கு உலகமே மெய் ; அதன் வாழ்வே உறுதி, அனுபவிக்கும் சுகமே பிரத்தியக்ஷசாதனம். இன்னும் வேறு சிலர்க்கு உலகமும், அதன்பேதங்களும் காலவேறுபாட்டால் ஒன்றினொடொன்றின் சம்பந்தத்தால் உதித்ததாக எண்ணம். பலவாறு பலர் பேசி நாத்தழும்பேறி வருகிறார்கள். இவ்வுலகம் போகபூமி என்று போற்றிப்புகழப்பட்டிருக்கிறது. வானாட்டின் நலமனுபவித்தவனுஞ் சிவனொடைக்யம்பெற ஒரு முறை போக பூமியில் பிறந்து சுகமனுபவிக்க வேண்டுமெனப் புராணங்கள் கூறுகின்றன. இப்போக பூமியில் சிறந்து விளங்கும் தாயுமான சுவாமி மலைக்கு அடுத்தாப்போல் இருக்கும் திருத்தவத்துறை என்னும் கொத்தமங்கலம், மூர்த்திதல விசேடத்தால் தரிசித்தோர் வாழ்வோர், மூழ்கினோர், இவர்களுக்குக் காசி பாலிறந்துங் கமலையிற் பிறந்தும் – தேசுமலிதில்லையுட்டிருநடங்கண்டும் அடையும் முத்திக்கு வித்தாய் பெருமை பெற்றிருக்கின்றது. அவ்வூருள் ஒளிரும் பல வீதிகளில் கார் காத்தவேளாளர் வாழ்வுறும் திருவீதியிலே, மாட மாளிகை ஒன்று உண்டு. அதில் நாயகனை இழந்த குறையொன்று மட்டுமேயன்றி ஏனைய நலமெல்லாம் அடையப்பெற்று, நற்சிந்தையுடைய ஐம்பதாட்டைப் பிராயத்தாள், வெள்ளாடை யுடுத்திய சிவந்த மேனியள், வெண்ணீறிலங்கு முன் நெற்றியள், குண்டல மொளிருங்காதினள், ஸ்ரீ சத்தரிஷிலிங்கர் பெருந் திருவாம்பிகையார் பாதமலர் பொலி வோங்கு மனத்தினள், "தோடுடைய செவியன் விடை யேறியதோர் பாகன்" என்னு மொழியினள், அடைந்தோர்க் கருளுங் குணத்தினள், ஒருத்தி கோழி கூவிய பின்

எழுந்து, "ஐயோ! மகனே, உன்னைப் பிரிந்தேனே. நீ போய் எட்டு ஒன்பது வருஷமாயிற்றே. நாள் எல்லாங் கனவாய்க் கழிந்ததே ! பிரிந்து நெடுநாள் ஆயிற்றே. இப்பொழுதோ நீ துஞ்சியதாகக் கனவு கண்டேனே. என் முன் னில்லாமற் போனையோ! உன் அழகிய முகத்தை இன்னுமொருமுறை பார்க் கக் கொடுத்துவையாத பாவியானேனே! உன்குஞ்சியழகைக் காணேன். கொ ஞ்சு மொழியைக்கேளேன். நீ பிசைந்து எறிந்து விளையாடும் சோற்றை யமுதென உண்டுகளிக்காத துர்ப்பாக்கியசாலியானேனே ! நின் உடம்பைத் தடவித்தடவி இன்பமடையக் காணேனே! என்ன செய்வேன் ? கெடுமதியா ளர் நஞ்சிட்டு உன்னுருயிரைப் போக்குவார்கள் எனப்பயந்து நின்னைப் போக்கி, என்னுடலைப் பெரும் பாரமாய்த்தூக்கிப் புவிப்பொறையாய் திரிகி றேன். குழந்தாய் ! நின்னைக் காதணிகளோடு ஒருசேரை வீரராயப் பணங் கட்டிக் கொடுத்து அனுப்பிய நாள் முதலே, நான் மேனி வாடி உணவு குறைந்து, வருத்தமேலிட்டுப் புவிவாழ்வை வெறுத்து, உழன்று வருகிறேன் உன்னை நான் உயிராகக் கொண்டிருக்கவில்லையா? உயிர் போன உடலால் என்ன பயன்? ஆனல் என் மருகனே ! என்னை இன்னும் கட்டைமேலிட்டு ஒருவரும் கொளுத்தவில்லை. என் உடல் எனக்குப் பாரமாயிற்று. எங் கும் நான் போகிறதில்லை. நலமும் சுகமும் எனக்குச் சிறிதும் இல்லை. சகலத்தையும் துன்பமாகவே வெறுத்துவிட்டேன். கருமணியை இழந்த கண் என்ன பயன்படும்? மணமொழிந்த மலர் எதற்கு உபயோகம் ? எவ ரும் வெறுப்பார்கள். எதற்கும் உபயோகம் ஆகாது. கண்டவர்களும் என் னைச் சகுனத்தடை யென்பார்கள். அத்துடன் என்னைப் பிள்ளையற்ற முண் டை யெனவும் இகழ்கின்றார்கள். பலர் தூற்றுக்கு ஆளாயினேன். எவர்தான் என்னை மதிக்கிறார்கள். உனக்குக் கொடுத்த நஞ்சை அந்தப்பாவிகள் எனக் குக் கொடுப்பதாய் நினைத்திருந்தால், நின்னைத் தனியே விட்டுப் புலம்பு வேனே? பிள்ளாய், இன்னும் ஒரு முறை நான் உன்னைக்காணப் பெறுவே னே ? ஜெகதீசனே ! உற்ற குறை போக்கும் உத்தமனே ! மாமுனி, வேத முனி, பத்தமுனி, சடாமுனி, ஞான சித்தமுனி, போதமுனி, பரம யோகி கள் என்னும் சத்தரிஷிலிங்கர் மனப் பிணிதீர்த்து அவர்க்கு ஞானத்தோடு இன்பம் அருளி மால் விடை யேறி விளங்கும் ஒண்மைபனே ! எனது ஆவி யான குழந்தை எமதூதர் கைப்பட்டு, உலகை நீத்ததாக நான் இப்பொழுது கண்ட கனவைக் கனவாக மாற்றியருளீரோ. அரியானே ! அருமறையின கத்தானே ! எனது உடன் பிறந்தான் இவ்வுலகினின்றும் இந்தக் குழந்தை யை விட்டுப் பிரியும் தருவாயில் என்முக நோக்கி, குழந்தையைக் குறை விலாது பார்த்து வளர்த்துவரக் கூறியது தாமறியாததா? வினைக்கேடர் பா லனுயிர் மாய்க்க நஞ்சினையருத்த எத்தனப்பட்டதை அறிந்து அஞ்சியல்ல வா தூர தேசம் சென்று அவ்வாபத்தினின்றும் பிழைத்து உலகில் பிழைத்து வரக்கருதி நினது திருவருட் சகாயத்தை முன்னிட்டுப் பாலகனை இவ்வ

கன்ற உலகிற் போக்கினேன். இளம் பாலனை அனுப்பினேன். பால்மணமாறா வாயனைத் தனியே விடுக்கும் மனந்தரித்தேன். இதை நீர் அறிவீரே! அறிந்தும் இக்கனவு கண்டேன். இதுவும் திருவுளச் சம்மதமா! நான் என்ன தவறு செய்தேன். உண்மையாக நான் உலகில் உள்ள எலலாப் பாவங்களும் ஓர் வடிவெடுக்கப்பிறந்தவள்தான். ஐயமோரணுவுமில்லை. எனினும் பாலனுயிரைக் கொண்டுபோகக் கனவு காண்பானேன்? அவன் எது மறியாத இளையவன் அல்லவா? நான் நின் திருப்பணி செய்வதிலே காலங்கழிக்கின்றேன். திருக்கோவில் திருமெழுக்கிடுவேன். பூக்கொய்து கட்டித் திருப்பள்ளித் தாமம் அணிவேன். திரு விளக்கேற்றுவேன். திருப்பாதம் பணிவேன். திருவாசகம் ஓதுவேன், தேவாரம் பாடுவேன். திருவலம் வருவேன். திருச்சந்நிதியில் உறை தருவேன். நின் சீரேயல்லாமல் மற்றொன்றும் கூறேன். இருந்தும்பயன் என்னாயிற்று? என்தேகம் பாவமயம் என்றாலும் பாலனுடலைப் போற்றுங் கருணை நீ புரியவேண்டாமா? கருணாகரக்கடவுள் நீ யல்லவா? அடைந்தோர்க்கடைக்கலமே! வலிய ஆட்கொள்ளும் பெருமானே! அருட்பெருஞ்சோதியே! அடிமுடிமாலயனறியா மெய்ம்மையனே! நின்செயலு மிதுவாமோ. என்ஐயனே! எனது அருமை மருமகன் உருவை இன்னும் ஒருமாதத்தில்நான்பாரேனேயாகில் என் ஆண்டவனே! என்னைக் காப்பவனே! மண்ணை உண்டவன் எத்தெடுக்கும் மேன்மையனே! கேண்மதி. என் உடலைத்தரியேன். உயிரைப்பாலனோடு முந்தியே போக்கிவிட்டேன். உடல்பொறுக்கேன். அதற்கு முடிவு வலுவிற்செய்து கொள்ளுவேன். இது சரதம். படமாட்டேன். என் அரசே! நான்பட்டதெல்லாம் போதும். இக்கெடுவுக்குள் நீ என்மகனைக்கூட்டிவந்து என்முன்பு நான் கட்டியணைத்து முத்தமிட நீ விடமாட்டாயானால், வானுலகில் அருமருந்தன்ன பாலனைத்தேட வருவேன். அங்கும் நினைவிடமாட்டேன். அங்குத்தான் நின் திருவுருவைச் சரியானபடி காண்பேன். பதம்பிடிப்பேன். மடியைக் கரம்பற்றுவேன். இழுப்பேன். இடப்பாகத்தொளிரும் பார்வதியம்மையிடம் எனது குறையிரப்பேன். முடிமீதுவாழு மவள் மாற்றாளிடமும் சொல்லுவேன். அவர்கள் பெண்கள். நானும்பெண். அவர்களுக்குஇனத்தார் அனுதாபம் இராதா? நான்படுந் துயரங்கண்டு அவர்கள்மனஞ்சகிப்பார்களா? அவர்கள்தருமம் வளர்ப்போர்கள் அல்லவா? அவர்களைக்கொண்டுநின்னைப்பிடிக்கவும் தூண்டுவேன். நீஎத்துணைப்பேர்களிடம்சிக்கி இருக்கின்றாய்? நானும் நின் அடியாள் அல்லவா? என்னைத்தனித்து இவ்வாறு புலம்பித் தேம்பிக் கதறவிடலாமா? நின் பெருமைக்கு அடுக்குமா? அருளுக்கேற்குமா? அறையாய், உலகமுதலீறான மெய்க்கடவுளே!" என்று விடாது கூறிக்கொண்டிருந்தாள். தெய்வத்தைநொந்தாள். இதைக்கேட்க வெளியில்சுற்றத்தார்கள் கூடிக்கொண்டார்கள். அருணன் உதயமானான். "இவள் என்னபயித்தியக்காரி. இவளுக்காகச்சாமிபையனைக் கூட்டிவந்து விடுவாரா? இதுசரி; இப்படி

இந்தநாளில் நடக்குமா? இருக்கட்டும். இவளால் இன்றைக்கு ஒருசேதியறிந்தோம். பையன் செத்துவிட்டானும். நல்லதாச்சு. கேட்கச்சந்தோஷம். மனது திருப்தியாச்சுது. இன்னுங்கொஞ்சம் சொத்து ராமையரிடம் உண்டு. அதற்கு வேட்டுவைக்கவேணும். மனதில் இன்றுதான் பால்வார்த்ததுபோல் இருக்கிறது. இந்தநாளே மறக்கக்கூடாது. இவளுக்கு எப்படி சமாசாரம் கிடைத்தது! தொலைந்தான் பையன்; இனி எப்பொழுதும் வரமாட்டான். இன்றைக்குக்காலமே நல்ல செய்திகேட்டோம். ஆற்றுக்குப்போய் முழுக்கிட்டுவரலாம்" என்று பேசிக்கொண்டு ஞாதிகளான பாலகர் புறப்பட்டார்கள். ஆற்றையடைந்து வேட்டி தோய்த்துக் காயவைத்து மூன்று முழுக்கிட்டார்கள். எழுந்தார்கள். கரைமீது ஒருவர்பின் ஒருவராக விபூதிக்கட்டுப் பிடித்தவர்களாகிப் பத்திரமும் புட்பமுங் கொண்டு சின்னச்சின்ன கிண்ணங்களில் நீர்நிரப்பிப் பகட்டாய் வைத்துச் சிவபூசை செய்தார்கள். இப்பாவிகளுக்குச் சிவபூசை எதற்கு? இவர்களுக்கு இப்பூசையால் என்னலாபம் உண்டாகும்? குற்றமற்ற மனத்தவர்கள் அல்ல. இவர்கள் கண்ணொன்றைப்பார்க்கும், மனமொன்றைநாடும், கருத்தொன்றெண்ணும், செவி மற்றொன்றைக் கேட்கும்,இவ்வாறுபூசைப்பாசாங்கியற்ற "அத்தரிக்கே தகடிக்கே! பையன்செத்தான். தொலைந்தான்" என்று இடையிடையே சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்பூசையால் நேரும்பலன் என்ன? இவர்களோமூழ்கப்போய்ச் சேறு பூசிக்கொள்ளுவதுபோலச் சிவபூசை கலங்கிய மனத்தோடு புரிந்து பாழ்நரகாழ்ந்து அதற்கே என்றும் மீளாவாளாகும் போலிச் சிவபூசாதுரந்தரர்கள். உண்டவீட்டுக்கு இரண்டகம் நினைக்கும் உத்தமர்கள்! அம்மாது பாலன் துஞ்சியகனவுகண்டு அகம்நொந்தாள். இவர்கள் அகம்பூரித்தார்கள். பையனோடிய பிறகும் அதற்குமுந்தியும் அக்கிரமமாய்க்கொண்டவீடுவாசல், தோப்புத்துறவு, பணம் பண்டம், கடன் உடன், நகை நப்பு இவைகளைத் தமக்குள் நேர்ந்த அநேக கலகங்களாற் பாகித்து ஏனோதானோவென்று அனுபவிக்கும் சோம்பேறி மூர்க்கர்கள். இவர்களுக்கோ, பிழைக்கும்வகை தெரியாது; இவர்கள், கற்ற ஊரிலும் குடியிருந்தறியார்கள். கற்றோர்கள் வாசனையும் கமழப்படாதவர்கள். நற்சிந்தை, நற்குணம், பீடமாய்விளங்கும் அம்மாதுக்குச் சுற்றத்தார்களாய்த் தோன்றினார்கள். அவளுக்குத் துர்ப்போதனை செய்தார்கள், அவள் இவர்கள் வசப்படவில்லை. திடசித்தத்தோடு வாழ்ந்தாள். தன்கருத்திற்கிசைய ஒழுகினாள். மூதேவிபிறந்த பாற்கடலில் இலக்குமிபிறந்தாள். பிந்தியவள் குணத்தில் மாறினாளா? இல்லை, அது போலவேதான் கொடுமையான சூழ்ச்சிக்கு ஆளாகாது மாது வாழ்ந்தாள். காலங்கழித்தாள்.

K. C. துரைசாமி.

APPREHENSIVENESS OVERCOME.

பீதி நிவாரணம்.

உலகத்துள்ள மாந்தருள் முக்காலே மூன்று வீசம் பேர் பயமென்னும் வியாதியாற் பீடிக்கப்பட்டவர்களாகவே யிருக்கின்றனர். வருநாளில் ஏதாவது துன்பம் வருமோ துரதிர்ஷ்டம் தொடுமோ என்ற பயம் இன்றைக்கே அவர்களை அடிமை கொள்ளுகின்றது. இவ்விபரீத வியாதி இன்ன சாதியாரிடத்தில் உண்டு இன்ன அந்தஸ்து உடையவர்களிடத்தில் உண்டு என்னும் நியதிகிடையாது. இது புகாத அந்தஸ்தில்லை, இது பாதிக்காத தொழிலில்லை.

சாதாரணமாக, நாம் எடுத்த காரியங்களை முடிக்கத் தவறினும் நமக்குத் துக்கங்கள் நேரிட்டாலும் அத்தவறு துக்கங்களை ஞாபகத்தில் வைத்துப் போற்றுவது நமக்கு வழக்கமாயிருக்கின்றது. இனி நடக்கு நாளில் வருவதென்று நாம் கருதும் துன்பத்தை அதிகப்படுத்திக் கோரமாய்க் காட்டுவதற்கு மூலகாரணமாயிருப்பது நம்பழைய ஞாபகமே. மனத்திற்குக் கற்பனு சக்தி எவ்வளவுண்டோ அவ்வளவுக்குத் தக்கபடி அதிகோரமான ரூபங்கள் அதன் முன்னே தோன்றிக்கொண்டிருக்கும். ஆனால் எல்லோரும் இந்த சங்கதிதெரிந்தே அப்பயமென்னும் பாதகன் வலையிற் சிக்குகின்றார்கள் என்று சொல்ல முடியாது. தெரிந்துந் தெரியாமலுந்தான் அவர்கள் அவ்வாறு செய்கிறதாகத் தோன்றுகிறது. நம் வாழ்நாளில் ஒவ்வொரு அனுபவமும் ஞாபகத்தில் பதிவு செய்யாமற் போவதில்லை. இந்த வாஸனு ஸ்வபாவத்தை நமக்கு நெடுநாள் வியாதியாகத் தொடர்ந்து வருகின்ற "துக்கத்தையே நோக்கும் சக்தி" யின் மகிமையால் நாளும் விர்த்திபண்ணிக்கொண்டு வருகிறோம். தீமை யெங்கேயிருக்கிறதென்று துறவுகின்றோமே யொழிய நன்மையை யலக்ஷியஞ் செய்துவிடுகிறோம். இவ்விதமாக நம்மனத்துள் நமக்கு எப்போதும் புலனுகாத ஒரு அந்தரங்க சக்தி ஏற்பட்டு நம் வாழ்நாள் முழுவதும் நம்மை யலக்கழிக்கும் திறம் வாய்ந்து சிறக்கின்றது.

ஆனால், தேசந்தோறுஞ் சாதிதோறும் பரந்து நிற்கும் இவ்வியாதிக்குத்தான் காரணமெங்குள்ளதென விசாரிப்போமாயின் "தெய்வம் எத்தன்மையது" என்னும் வினவிற்கு நாமிதுகாறுங் கொடுத்துவந்த தப்புவிடையினுலேயே யென்று தெளிவாய்க் காண்போம். இவ்வியாதிக்கு மூலமெல்லாம், கடவுள் நம்மைக் கருணையோடு பார்ப்பதில்லை, பழிக்குப் பழிவாங்கும் குணம் நிறைந்துள்ள ஒரு புருஷன், தன்னுற் சிருஷ்டிக்கப்பட்ட ஜனங்களை விசாரணை பண்ணும் நியாயாதிபதியாய் வீற்றிருந்து அவர்களிடத்துத் தமக்குக்கோபமிகுமாயின் அவர்களைத்தன் ஏவல்களைவிட்டுத் துன்பப்

படுத்தியும், அவர்கள் பெருங்குற்றஞ் செய்வார்களாயின் ஒரேயடியாய் மீளா நரகில் தள்ளியும் தண்டிக்கும் அத்தனை கொடியன் என்றும் இன்னும் பல வாறுகவும் நமக்குள் நடை பெறும் துரபிப்பிராயங்களேயாம். சித்தாந்த சைவரென்றும் விசிஷ்டாத்வைதவைணவரென்றும், அத்வைதிகளென்றும் அநேகரிருக்கின்றனரே. அநேகமாய் நம் நாட்டுச் சனங்களை யெல்லாம் இவ்வகுப்புக்களுளொன்றனுள் அடக்கலாமே, அவர்களும் இப்படிப்பட்ட துரபிப்பிராயத்தை அவலம்பிப்பவர்களேயோ என்றுசிலர் கேட்கலாம். அதற்கு 'ஆம்' விடையே பகர வேண்டியிருக்கின்றது. இத்திறத்தார் சாத்திரங்களெல்லாம் எட்டுச்சுரைக்காய்களேயா யிருக்கின்றன. எட்டுச்சுரைக்காய் எங்கேயாவது கறிக்காகுமா ? இவர்களுக்குரிய சாஸ்திரங்களை யாதியிலுண் டாக்கிய பக்த பாகவத ஞான சிகாமணிகள் தாங்கள் சொல்லியதின்னதென் றுணர்ந்தே சொன்னார்கள். தங்களாலியன்றவரை தாங்கள் அநுஷ்டித்துங் காட்டினார்கள். இக்காலத்து, சாத்திரங்களைக் கற்றுக்கொண்டு வாய்ஞானம் பேசுகிறவர்களைக் காணுந்தோறும் வயிறெரிகின்றதே. சாத்திர மொருபுறம் ஒழுக்கம் ஒருபுறமா ? எத்தனை சைவர்கள் நோய்கள் வருங்காலத்தில் இது தெய்வக்குற்றத்தால் வந்ததென்று அநேக சம்பவங்கட்குக் காரணங் கூறுதவர்கள். எத்தனை சைவர்கள் பரம கருணாநிதியாகிய சிவபெருமான் ஒருவரே நமக்கு உற்ற தெய்வம் என்று பலமுறை சாத்திரங்களிற் படித்தும் மற்றோரறியப் பிரசங்கித்தும் மாடன் சுடலைக்கு மகிழ்ந்து பலியிடுகின்றனர். குறளியைக் கும்பிட்டுக் கூத்தாடுகின்றனர். இன்னும் இவர்கள் வீட்டிற்பெண்டிர் செய்யுங் கூத்துக்கள் இங்கே யுரைக்கத் தக்கனவோ? ஒவ்வொருவரும் தந் நெஞ்சைத் தொட்டுப்பார்த்து

"தன் னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன் னெஞ்சே தன்னைச் சுடும்"

என்னும் பொய்யா மொழியைச் சிந்தித்துத் தங்குறையை யறிதலே சாலும். இனி நம்மவருள் "தெய்வத்துக்கு நேர்ந்துகொள்ளுதல்" என்றொரு வழக்கம் உள்ளது. தெய்வத்துக்கு நேர்ந்ததைக் கொடுக்காவிட்டால் அது நம்மை யடியோடு கெடுத்து விடும் என்று நம்பி நடப்பது நமக்குள் அதிஸஹஜமாயிருக்கின்றது. இம்மூட நம்பிக்கைகள் நம்மவரைவிட்டு எப்பொழுது நீங்குமோ?

இனி, கடவுளைப் பற்றியுள்ள இந்த துரபிப்பிராயத்தோடு மனிதரையெல்லாம் தன் வசப்படுத்தக்கூடிய ஒருவித சக்தி தீமைக்கு உண்டென்றும், மனிதரை மனங் குழம்ப அடித்துத் துக்கத்துளழுத்த அதற்குக் கடவுள் உத்தரவளித்திருக்கின்றாரென்றும் ஜனங்கள் நம்புகின்றனர். பலம் மிக வாய்ந்த இந்த இரண்டு துரபிப்பிராயங்களும் மக்கட்கூட்டத்தி னறியாமையிற்றோன்றி நம் தொட்டிலில் உருவெடுத்து நம்மோ டுடன்வளர்ந்து

சாந்தமே சௌக்கியமே சுகமே என்பவற்றைக் கவளீகரித்துக்கொண்டு அவற்றிற்கு நேர் விரோதமானவைகளையுமிழ்ந்து கொண்டிருக்கின்றன.

நோய் என்றால் பயம் விட்டவர் யாவர்? துரதிர்ஷ்டம் என்றால் நடு நடுங்காதவர் யாவர் ? மரணமென்றால் என் நாம் அவ்வளவு பயப்படுகிறோம்? மரணத்திற்காகவா நாம் அவ்வளவுபயப்படுகின்றோம்? இல்லை. உடல் போனமாத்திரையில் நிரதிசயானந்தம் நமக்குக் கிட்டுமென்னும் உறுதியிருக்குமாயின் யாவர்தாம் சாகத்துணியாதவர் ? யாவர்தாம் மரணத்திற்கஞ்சுவர்? மரணத்திற்கப்புறம் என்னநேருமோ என்னதுக்கமோ என்ற பயந்தான். பஞ்சபூதங்கள் தாமும் நம்கண்ணுக்குத் தீமை செய்யச் சக்திவாய்ந்தனவாயிருக்கின்றன. மாரிக்காலமென்று லொருவனுக்கச்சம் கோடைக்காலம் மற்றொருவனுக்கச்சம். இன்னொருவன் கொண்டலைக் (இராக்காலத்து வீசும் கீழ்காற்று) கண்டு கொடுங்கலிடுவான். நேர்பயமில்லை என்று சிலர் சாதிக்கலாமாயினும் நம்பிக்கை யில்லாமையுண்டென்பது சரதம். எப்படியாவது இரண்டிலும் விளைவு பயமென்னும் பீடைதானே. நாம் காரிய காரணத்தைப் பொருத்திப் பார்க்கின்றோமில்லை. மெய்மைக்கும் பொய்மைக்குமுள்ள பேதத்தைக்கண்டு தெளிகின்றோமில்லை; காலமும் பொறிகளுமே நமது பிரபஞ்சமாயிருக்கின்றன. பொறிகளுக்கப்பாலாகிய "பொறியதீத" நம்பிக்கை (விசுவாசம்) க்குச்சீட்டுக் கொடுத்துவிட்டு நாம் ஜீவித்துவருகின்றோம். விதியோ அதிர்ஷ்டமோ ஊழோ என்னகொண்டு வரப்போகிறதென்று பயத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். நம்முடையகடவுளையும் மட்டுப்படுத்தி அறைகுறையாக்கி, முக்கிய அம்சத்தை விட்டுவிடுகிறபடியால் நம்மையும் மட்டுப்படுத்திக் கொள்கின்றோம்.

இந்தப் 'பயவியாதி' ஆளுக்குத் தக்கபடியெல்லாம் கோலங்கொள்ளும். அஃதவரவர் அநுபவத்தில் ப்ர்த்துக்கொள்ளவேண்டுமே யொழியச் சுருக்கித்தானு மிங்குச் சொல்லக்கூடாதகாரியம். ஆயினும் சாமானியமானவற்றுட் சிலவற்றைச் சொல்லுதல் உபகாரமாயிருக்குமாதலின் அச்சிலவற்றைப் பற்றிப்பேசுவாம். பயத்தினுடைய கெடுதலைச் சக்திகள் கர்ப்ப சிசுவினிடத்தேயே தங்கள் வேலையை யாரம்பித்துக்கொள்கின்றன. சில சமயங்களில் ஏதோகுறிப்பிட்ட அநுபவத்தால் தாய்க்குத் திகில் உண்டாகுமாயின் அது காரணமாகச்சிசுவினுடைய உடலிலேயோ குணத்திலேயோ அஞ்சத்தக்கதொருகுறை யேற்படுகின்றது. இன்னும், அத்தாயினுடைய திகில் அநுபவம் குறிப்பிட்டதாயிராது பொதுவாயிருக்குமாயின் சிசுப்பிறக்கும்பொழுது குறையவ்வளவு புலப்படாது. ஆயினும் உயிர்க்கருவிகளுள் விஷமேறிவிட்டதாகையால் பலனில்லாது போகுமா ? குழந்தை சரியாய்வளராது குன்றிப் போகின்றது. பெற்றோர் தம்பிள்ளைகட்கு உரிமையாக அளிக்கும் பயபீதிகளின் கொடுமையையும் குரூரத்தையும் தற்காலத்துமனஸ்தத்வசாஸ்திரமும் சிசுமனோவிகாரங்களும் நன்றாக வெளியிட்டிருக்கின்றன

அநேக தாய்தந்தையர் தங்கள் சிசுக்கள் குழந்தைப்பருவம் கழிந்து வாலிபப்பருவம் புகுந்து வளருங்காலமெல்லாம் குறையில்லாமல் வளரவேண்டுமேயென்றுபயத்தோடும் கவலையோடும் சிரத்தையெடுத்து வளர்க்கின்றனர். இவர்கள்பயம் விளையும்பயிரைப் பீடியாதுபோகாதே. தன்பலனைத் தான் கொடுத்தேதீர்க்கும். வயசுமுதிரும்பொழுது, ஸ்வபாவமேயோ அநுபவபலனோ புதுப்புதுப்பயங்கள் நம்மைவந்தடுக்கின்றன. தரித்திரமென்றால் ஒருதிகில், இயற்கைச்சம்பவமென்றால் ஒரு நடுக்கம், ஜனாபிப்பிராயம் என்றால் அநியாய அச்சம்.

இந்தப்பயவியாதி நம்மைப் பீடித்தக்ஷணமே, நாம்வாழுமிடம்சூரியனில்லாத இருட்புவனமாகின்றது. நம் பரபரப்பெல்லாம் அடங்கி நம்முடம்பு பிணம்போலச் சில்லெனக் குளிர்ந்துவிடுகின்றது. நம்ஸ்வபாவ முழுதும் மாறித் தீராத அசதியுண்டாகிக் கால்கையசைப்பதே கடினமாகின்றது. நரம்பு நிலைகளெல்லாம் பாதிக்கப்பட்டு அஸஹ்யகுணங்கள் சரீரத்தின் கண்ணே தோன்றுகின்றன. இதனால் பித்தவிருத்தியற்று இரத்தோட்டந் தடைப்பட்டு இரைப்பை புளிப்பேறி, நரம்புகள் வலியற்று பக்கவாதமும் தோன்றிக் கிடையும் படுக்கையுமாய்க்கூட ஆகும்படி நேருகின்றது- இரண்டுமிரண்டுங்கூடி நாலாகின்றது என்னும் கணித தீர்மானம் சத்தியமாயிருக்கும்வரை இவைகள் சத்தியமாயிருப்பது தப்பாது. காரியகாரணங்களும் மனமும் அதனையாசரித்திருக்கும் சரீரமும் பிரிக்கக்கூடாதன. பெருவாரிநோய்கள் அபாயகரமானவையென்று சொல்வதற்குக்காரணம் அறிந்தோ அறியாமலோ உண்டாகும் திகிலிலுள்ள தென்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை. வியாதிக்கு மூலமான அங்குரங்கள் (அணுரூபமாகிய சிற்றுயிர்கள்) வியாதிகளை யுண்டாக்குகின்றன வென்றும், பரவச்செய்கின்றனவென்றுமுள்ள அபிப்பிராயம் மாற ஆரம்பித்துவிட்டது. 'அவ்வங்குரங்களானவை வியாதிக்குமுதற் காரணங்களாகா. அவைகளை விரும்பி யுபசரித்து நிற்கும் ஸ்திதியையுடைய ஒருடலுக்குப் புது ஸ்திதியைத்தந்து துணைவேலைசெய்யும் சாமர்த்தியம் அவைகட்குண்டு' என்னும் அபிப்பிராயமே இந்நாள் கற்றறிந்தூக மிக்க மாந்தராற் கொள்ளப்படுவது. உயிருக்கு ஹானியுண்டாக்குவது அவ்வங்குரவியாதி மூலங்களல்ல, நிலையழிக்கும் பயங்கரமான எண்ணமேயாகும்.

இப்படி யுடல்நோயில் மட்டுமோ பயம் தன் தொழிற்றிறங்காட்டுவது தண்டனைக்குப் பாத்திரனாகும்படி ஒருவன் குற்றஞ்செய்வதும் இதனாலேயல்லவோ? திருட்டுத்தொழில் புரிபவரெல்லாம் தமக்குச் சனசமூகத்தில் அந்தஸ்து எற்படவில்லையென்று பாதிப்பேரும் சனசமூகத்தில் அந்தஸ்துப் போய்விடுவதாயிருக்கிறதென்று பாதிப்பேரும் பயந்தல்லவோ தந்தீத்தொழில்புரியப் புகுகின்றனர்? அர்த்தசாஸ்திரத்தில் (பொருள்நூலுள்) பயபீதிக்குணமும் பிரஸ்தாபத்திற் கெடுத்துக்கொள்ளப்படவேண்டியவிஷயம் நம்பிக்கைதான் வியாபாரத்துக்கு (தொழிற்கெல்லாம்) உயிராயிருக்கின்றது.

நம்பிக்கை எவ்விடத்து நெகிழ்கின்றதோ, அவ்விடத்து வர்த்தகம் மட்டுப் படுகின்றது, பணங்கொடுக்கல் வாங்கல் நின்றுவிடுகின்றது, தொழில் முயற்சிகள் அற்றுப்போகின்றன. அப்பொழுதுதான் "கஷ்டகாலம்" நம்மை வருத்துகின்றது. பயத்தைவிட நம்பிக்கைக் கேட்டிற்கு ஏதுவாயிருப்பது யாது? தரித்திரமும் குற்றமும் பிணிகள், பயம் பிணிக்காரணம்.

இவ்வாறு காரியகாரண விசாரணையாயிற்று. இனி இப்பிணிகளை நீக்குஞ் சஞ்சீவி எங்குள்ளது? மூலத்தைப்போய்ப்பிடித்து வேலைசெய்யாதமருந்தினால் பிரயோஜனமில்லையென்பது தெரிந்தேயிருக்கின்றது. மூலத்தை உடனே எடுக்கவேண்டும், அதுவும்எப்படி, திரும்பத்தோன்றாதபடி வேரோடு பிடுங்கிவிடுதல்வேண்டும். பயமும் கவலையுமில்லாதிருப்பது மனுஷஸ்வபாவத்துக்குச் சர்த்தியமாவென்று அநேகர் ஆசங்கிப்பது ஸஹஜம். அந்தர்ப் பூதனாகிய கடவுள் எந்நாளுந்தோன்றாத் துணையாயிருந்து எல்லாவற்றுள்ளும் தான்புகுந்து தன்னுள் எல்லாம் புகவும் வீற்றிருப்பவன் ஒருவன் உளனென்று நம்பி அந்நம்பிக்கையைத் தன் வாழ்நாளில் ஒவ்வொருநாளும் மறவாது கொண்டொழுகுதல் மனிதனுக்குச் சாத்தியந்தானே? இதிலேயே பாதித் தீர்வை தீர்ந்தாய்விட்டது. **ஸ்வீடன்பர்க்** என்னும் ஞானசிகாமணி சொல்லுவதைக்கேட்போம்: "வருநாளைப்பற்றி நினைத்து வேண்டிக்கொண்டிருத்தலோடு தொழில்களும் அவ்வேண்டுதலுக்கேற்பச் செய்வோமாயின் அது ஆத்ம ஞானவாழ்க்கையை நிஸ்ஸாரமுள்ளதாக்குகின்றது. எங்ஙனமெனின், இப்படிவேண்டுபவர்கள் கடவுளால் ஏற்படவேண்டிய நியதியைத் தாமே தலையிட்டு ஆக்கிக்கொள்ளுகின்றனர். இவ்வாறு செய்தலினால் அன்னோர் தன்போக்கிற்செல்லும் வாழ்க்கைத்தேரைத் தடிபோட்டு நிறுத்துகின்றனர். அது மாத்திரமோ நன்மையாலும் சத்தியத்தாலும் மேன்மைப்படவிருக்கும் வாழ்நாளைப்பாழ்நாளாகச் செய்கின்றனர்." இங்கே மற்றைப் பாதித்தீர்வையுந் தீர்ந்தாய்விட்டது. அதுதான். தன்னுடையஜீவன் அப்பரம்பொருளினது வெளிப்பாடே என்னும் நம்பிக்கை யாகும். இது முந்திக்காட்டியதோடு சேர்ந்துதீர்வை முழுதுந்தீர்ந்தாய்விடுகின்றது. இனி அவற்றைத்தெளிவாகவுரைக்கின், முதலாவது-எங்கு நிறைந்துள்ள உண்மைப்பொருளும் மாறா நன்மையுமாய் பிரபஞ்சமுழுதுந்தன் வெளிப்பாடாகவேயிருக்கப்பெற்றகடவுளைப் பூர்ணானந்த அநுபூதியிற் காண்டல். இரண்டாவது-இப்பெரிய சத்தியத்திற்கும், மேற்குறித்த பரம்பொருளினுடைய சாயையிற்றோன்றியுள்ள மனிதன் ஆத்மரூபியே அவனுக்கென்றேற்பட்டுள்ள உத்தமோத்தம பதவிக்கு அவனை யுய்க்கும் நன்மை யுண்மை பிராணன்கள் கடன்மடை திறந்தென அவனிடத்திற் பாய்ந்து கொண்டிருக்கின்றன என்னும் அச்சத்தியத்தினின்றுங்கிளைக்கும் இரண்டாவது சத்தியத்திற்கும் தன் நினைப்பெல்லா

வற்றையும் தன் தொழிலெல்லாவற்றையும் பொருந்த வைத்தல். இதுதான் குறி. இது எல்லாராலும் எவ்விடத்தும் அடையலாகும் என்பது சந்தேகமொரு புறமுமில்லாது தாராளமாகச் சொல்லத்தக்க வார்த்தை.

இவ்விதமாக பயபீதி நீங்கும் உபாயம் இலேசாய்விட்டது. அதாவது நாம் நம்மனத்தைத் திருப்பவேண்டும். இதுவரை நாம் எண்ணிக்கொண்டிருந்த வழியை விட்டு வேறேவழியில் எண்ணவேண்டும், நன்மையும் அழகும் பொருந்திய எல்லாவற்றையும் கிரகித்து வைக்கும்படி அந்தப்பேருண்மையைச்சார அறியாமை விபரீதவுறிவு இரண்டிலும் படாமல் நம்முடைய மனம் சரியான வழியில் தொழில் செய்யும்படி அதனைப் பயிற்றவேண்டும். நினைத்தற்குரிய நம் மனக்கருவிகளெல்லாம் நாம் மனங்கொண்டபடி யுபயோகிக்குமாறு நமக்களிக்கப்பட்டிருப்பனவாம். சக்தியெல்லாம் இச்சையினின்றுண்டாகிறது. நாம்மட்டும் மனம்வைத்தால் எவ்விதக்கவலையையும் எவ்வித பயத்தையும் ஒழித்துவிடலாம். ஈசுவரனைப்பற்றியும் அவ்வீசுவர சிருஷ்டியாகிய பிரபஞ்சத்தைப்பற்றியும் உயர்ந்த விவகார புத்திக்கும் சாஸ்திர நுட்பங்கட்கும் ஞான திருஷ்டிக்கும் சம்மதமாயுள்ள கொள்கையை யொப்புக்கொள்ளுமாறு நம்மனத்தை நாம் பழக்கிவருவதனால், பயபீதி நினைப்புகளுக்கு இடமேது? இந்நினைப்புகள் மறைந்து போவதனால், உண்மையுஞ் சுகமும் நம்பிக்கையும் எவை யெல்லாம் காட்டுமோ ஒரு வார்த்தையிற் சுருக்கிச் சொல்லின் எவை யெல்லாம் தெய்வீக விஷயங்களோ அவற்றை யெல்லாம் ஏற்றுக்கொள்ளும்படி நம்மனக் கதவு கொஞ்சங்கொஞ்சமாய்த் திறக்கப்பட்டு வருகின்றது. நம்முடைய பயமெல்லாம் தைரியமாய் மாறுகின்றது. நம்முடைய விசுவாசமெல்லாம் தொழிலாகப் பரிணமிக்கின்றது. கடவுள் நம்மோடு துணை நிற்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும்பொழுது எந்த மனிதன் நம்மை விரோதிக்கலாம்? எந்தப்பொருள் நமக்கு விரோதஞ் செய்யும்? எவை விரோதஞ்செய்து என்ன சாதிக்கலாம்? இவ்விதமாக, உலகத்தில் அந்தர்ப் பூதனாயிருக்கும் பரம்பொருளை அன்பு மயனாயிருந்து அன்பை நாளும் நாடிய விடத்தெல்லாம் தோன்றச்செய்துகொண்டிருக்குந் தோன்றலைக்காணும் பாக்கியம் பெறுகின்றோம். பகவத் கீதாமிர்தத்தை வருஷித்த கண்ணபிரானும் பரமகருணாநிதி மானிடவுருவெடுத்ததென விளங்கிய புத்தபிரானும் மேற் புலத்திற் கெல்லாம் ஞான சூரியனாயிருக்கும் யேசுபிரானும் ஆகிய மூவரும் அவரத்துணைப் பெருமை வாய்ந்த பெருமக்களுமே உத்தமோத்தம உண்மை நிலையை விளக்கவந்த அவதார புருஷர்களாதலால் அவரத்துணைப் பெருமையோடு இவ்வுலகத்து அன்புமயனாகிய ஈசுவராவதாரமாய் நாமும் விளங்குகின்றதை யநுபவித்துக் காண்கின்றோம். இந்த க்ஷணம் முதல், நித்தியானந்தத் தழுந்தும் வாழ்வு நம்மதே யாகும். அந்த வாழ்விற் பேரன்பு பூண்டொளிர்க்கும் நம்முன் பயம் ஓட்டெடுக்காதென் செயும்?

அன உரத விநாயகம்பிள்ளை.

ON DOMESTIC LIFE.

இல்வாழ்வியல்.

"பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்"
"இல்லாரை எல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாரும் செய்வர் சிறப்பு"
"ஆகாறளவிட் டிதாயினுங் கேடில்லைப்
போகா றகலாக்கடை"
"வளவனாயினு மளவறிந் தழித்துண்"

பணத்தின் மதிப்பு.

"அருளிலார்க் கவ்வுலகமில்லைப் பொருளிலார்க், கிவ்வுலகமில்லை யாங்கு" என்றார் நாயனார். ஆதலின் இவ்வுலக இன்பம் பொருளின்றி அமையாது என்றேற்படுகின்றது. "பணமென்றால் பிணமும்வாய்திறக்கும்" என்பாராதலின் இவ்வுலகில் பணத்தை வேண்டாதார் ஒருவருமில்லை. அப்பணமே எல்லா இன்பங்களுக்கும் காரணம் என்பதிலும் தடையில்லை. ஆனால் தன்மையறிந்து தேடும் வகையில் தேடி அனுபவித்தால்மட்டும் அவ்வின்பம் சித்திக்கும்; அன்றேல் அளவிறந்த அல்லலுக்கே காரணமாகும். நாம் உலகத்துள்ள தானியம் முதலிய பொருள்களை யெல்லாம் பணத்தைக் கொண்டு மதிப்பிடுகிறோம். அத்தானியாதிகளின் மதிப்பு எப்போதும் எல்லாவிடத்தும் ஒரே விதமாக இருக்கிறதில்லை. ஓரிடத்தில் இருந்த, விலை மற்றோரிடத்தில் இருக்கிறதில்லை. ஒரு காலத்துள்ள விலை மற்றோர் காலத்தில் இருக்கிறதில்லை. நேற்று ஒரு ரூபாவுக்குப் பத்துப்படி அரிசி விற்று இன்று ஒன்பதே முக்காலும் நாளை ஒன்பதரையுமாக விற்றால் அரிசியின் மதிப்பு நாளுக்குநாள் அதிகப்படுகிறது என்றும், நேற்று ஒன்பதரைப்படியும் இன்று ஒன்பதே முக்காலும் நாளை பத்துப்படியுமாக மாறினால் அதன் மதிப்பு நாளுக்கு நாள் குறைந்து வருகிறதென்றும் சொல்வோம். ஏனென்றால் அரிசியின் மதிப்பு ஏறுங்காலத்தில் நேற்று பத்துப்படிக்கு ஒரு ரூபாய் கொடுத்த நாமே இன்று அவ்வொரு ரூபாயை ஒன்பதே முக்காலுக்கும் நாளை ஒன்பதரைக்கும் கொடுக்கின்றோம். இறங்கி விற்கும் காலத்தில் அவ்வாறே முன்னையதினத்தில் ஒரு ரூபாய்க்கு ஒன்பதரை வாங்கிய நாமே பின்னைய நாளில் ஒன்பதே முக்காலும் அடுத்த நாளில் பத்தும் வாங்குகின்றோம். அப்படியே இடந்தோறும் பேதப்படுவதும் பிரத்தியக்ஷமாக இருக்கின்றது. நெல் விளையுமிடத்தில் ரூபாவுக்குப் பன்னிரண்டுபடி வாங்கக்கூடிய நாமே அந்த ரூபாவுக்கு மற்ற இடத்தில் ஒன்பது அல்லது பத்துப் படிக்குமேல் வாங்கக்கூடாதவர்களாக இருக்கின்றோம். இனி உல

கத்தில் உள்ள எல்லாப் பொருளுமே இவ்வாறு காலந்தோறும் ஏறியும் இறங்கியும் விற்கக் காண்கின்றோம். ஆதலின் அவற்றின் மதிப்பு நிலையாயிராமல் காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்றபடி மாறுபடுகின்றது என்று நமக்குத்தெரிகிறது. ஆனால் அவற்றை மதித்தலுக்கு நமக்குக் கருவிகளாக இருக்கின்ற அளவைகள். எண்ணல் எடுத்தல் நீட்டல் முகத்தல் என்பன. அவை மட்டும் எப்போதும் ஒரே திறத்தன வாக இருக்கின்றன. இப்படியே இந்த வீசை. கஜம், படி முதலியன போலவே பணமும் எப்போதும் ஒரே விதமான மதிப்புடையது என நாம் கருதுகின்றோம். ஆனால் உண்மையில் அது அப்படியில்லை. மறப் பொருள்களைப்போலவே பணமும் மதிப்பில் மாறுபடுகின்றது. நேற்று ரூபாவுக்கு ஒரு மணங்கு புளிவாங்கி இன்று முக்கால் மணுவும் நாளைக்கு அரை மணுவும் வாங்குவோமானால் பணத்திற்கு நாளுக்கு நாள் மதிப்புக் குறைந்துவிடுகிறதென்பதில் தடையென்ன ? நேற்று ஒரு மணுவாங்குகிற தற்கு இருந்த யோக்கியதை இன்று இல்லாமற்போய் முக்காலே வாங்கக் கூடியதாயிற்று. அதாவது நேற்று ஒருமணுவுக்கு ஒரு ரூபா கிடைக்கக்கூடிய தாக இருந்தது. இன்று ஒரு மணுவுக்கு ஒன்றேகால் ரூபாய் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆதலால் மற்றவைகளுக்குப் போலவே பணத் திற்கும் காலத்திற்குக் தக்கவாறு மாறத்தக்க மதிப்பே உண்டென்று ஏற்படுகின்றது. ஆதலின் பணமானது தன்னைக்கொண்டு மற்றப்பொருள்களை வாங்குதலில் தனக்கு இருக்கும் யோக்கியதையின் அளவுக்குத்தக்கபடி உயர்வும் தாழ்வுமான மதிப்புடையதேயன்றி வேறில்லை யென்பதே சித் தாந்தமாகக்கொள்க. (இன்னும் வரும்)

திருச்சிற்றம்பலம் பிள்ளை.

AHALYA.

அஹல்யா.

ஒருநாட்காலையில் வள்ளுவன் என்ற ஒருவன் ஆற்றங்கரையை அடுத்த தன் குடிசைத்திண்ணையில் உட்கார்ந்திருந்தான். அவன் உடம்புமிகவும் இளைத்திருந்தது. அதில் எலும்பும் தோலுமே அல்லாது தசை ஒரு சிறிதும் இல்லை. முகமோ கொஞ்சமும் களையில்லாமல் மிகவாட்டமுற்றிருந்தது. அக்காலத்தில் அப்பிரதேசமெல்லாம் கொடியபஞ்சத்தால் வருந்திக்கொண் டிருந்தது. ஜனங்கள் ஆகாரமில்லாமையால் வருந்தி ஆயிரம் ஆயிரமாக இறந்துகொண்டிருந்தார்கள். இவ்வள்ளுவனும் சரியான ஆகாரம் உட் கொண்டு அநேகநாள்கள் ஆய்விட்டன. அவனுக்கு ஓர் மனைவியிருந்தாள்

அவளை இவன் அதிகமாக நேசித்துவந்தான். அவளுக்கு வயது பதினறு அல்லது பதினேழாக இருந்தாலும் குழந்தைகள் மூன்று பிறந்துவிட்டன. அந்தப்பஞ்சகாலத்தில் அவர்களனைவரையும் போஷிக்க அவ்வள்ளுவன் என்ன செய்வான் பாவம். அதிககஷ்டப்பட்டுக் கொஞ்சம் தான்யத்தைச் சம்பாதித்து வந்து கூழோ கஞ்சியோ காய்ச்சிக்குடிக்குமாறு தன்மனைவி மக்களுக்குத் தந்துவிட்டு தழையையும் தாம்பையுமேதின்று அதுவரை தன்னுயிரைக் காப்பாற்றிவந்தான். அதற்குமுன் இரண்டு நாள்களாக அக்கஞ்சிக்கும் மார்க்கமில்லாமற் போகவே அவன்மனைவி கைகால்களை அசைக்கவும் சக்தியின்றிக் குடிசையினுட் படுத்துக்கிடந்தாள். குழந்தைகள் கதியும் அதுவே. அதில் அனைவரும் ஒருங்கே உயிரை மாய்த்துக்கொள்வது என்பதைத்தவிர கதி ஒன்றும் காணவில்லை. இந்நிலையில் அவன் தன் குடிசைத்திண்ணையில் உட்கார்ந்தபடியே தனக்கெதிரே பிரவாகித்து ஓடும் ஆற்றின் ஓட்டத்தைப்பார்த்துக்கொண்டே கீழ்வரும் விதமாக எண்ணமிட்டான்:

என்ன பிரயோஜனத்துக்காக நாம் நம்முயிரைக் காப்பாற்றவேண்டும்? இவ்வுலகில் நமக்கென்ன இருக்கின்றது? எல்லாம் துக்கத்திற்கே காரணமாக இருக்கின்றதேயன்றிச் சுகம் ஒன்றையும் காணேம். இக்கொடிய பஞ்சத்தில் நம்மைப்போல வருந்துகிறவர்கள் எவ்வளவோ பெயர்கள் இருக்கின்றார்கள், ஆனாலும் அவர்களுக்கெல்லாம் வறுமைவந்தாலும் ஒருவித உபகாரமிருக்கிறது. ஏதோ நாலுவீட்டில் இரந்தானாலும் வயிற்றை வளர்த்துக்கொள்ளலாம். நமக்கோ அதற்கும் மார்க்கமில்லை. பறையனுக்கு ஆர் பிச்சையிடுவார்கள்? நாய் அவ்வுயர்குலத்தவர்களது தெருவிலும் போகக்கூடாதே. நம்சத்தமே அவர்கள் காதில் விழக்கூடாதாமே. இல்லாமைக்கொடுமையால் மாறுவேடம்பூண்டாவது அந்த இடங்களிற்சென்று ஏதாவது யாசித்து வரலாமென்றால் ஒருவேளை கண்டுவிட்டால் நம்முடைய காலையே வாங்கிவிடுவார்கள். பிறர் அடிக்கவரும்போது பறையன் தன்கையைத் தூக்கவாவதுசெய்யலாமா? ஐயோ தலையே போய்விடும். அல்லாமலும் அப்படி மாறுவேடம் பூண்டு இரந்துவந்து காப்பாற்றினாலும் இவ்வுயிர் எத்தனை நாளைக்கு நிலைத்திருக்கப் போகிறது. மனுமாந்தாதாவாதி மகாராஜாக்களெல்லாம் மாண்டு மண்ணுக்கிரையாகிப் போய்விடவில்லையா? நமக்குமட்டுமென்ன இவ்வுலகம் கல் போட்ட காணியாகவா இருக்கப்போகிறது? ஏதோ இருக்கும்வரை நம்முடைய குலாசாரப்படி இருந்துபோனால் பகவான் மறுமைக்காவது நல்ல பதவியைக் கொடுக்கமாட்டாரா? எனக்கும் என் பெண்டாட்டி பிள்ளைகளுக்கும் அரை வயிறு கஞ்சிக்காவது மார்க்கம் ஏற்படும்பட்சத்தில் நான் என் பிறப்பைப்பற்றிச் சிறிதும் அதிருப்தியின்றிச்சந்தோஷமாகவே என் காலத்தைக் கழித்துவருவேன். அதற்கோ மார்க்கம் ஒன்றையும் காணேம். மனைவிமக்கள் படுங்கஷ்டத்தையோகண்கொண்டு பார்க்கமுடியவில்லை. அந்த

ஆற்றில் வீழ்ந்து நம் ஆவியை ஒழித்தால் நம் கஷ்டமும் ஒருவாறு ஒழியும் இவர்களையெல்லாம் விட்டுவிட்டு இறக்கவும் மனம் வரேன் என்கின்றதே. என்றிப்படி எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் யாரோ ஒருவீரன் ஒரு குதிரையின்மேலேறிக்கொண்டு ஆற்றிலிறங்கி எதிர்க்கரையிலிருந்து தன் வீட்டையடுத்த கரையைநோக்கி வருவதை இவ்வள்ளுவன் கண்டான்.

(இன்னுங் வரும்.)

திருச்சிற்றம்பலம் பிள்ளை

READINGS IN TAMIL POETRY--II.

தமிழ்ச் செய்யுளாராய்தல்--II.

நாலடி.

1. **செல்வஞ் செல்லுமே**:—செல்வம் நிலையற்றது. எங்குந்திரிந்தோடுவது. எவர் கையிலும் ஒருங்கே இராதது. ஆதலால் அதற்கிட்ட பெயர் தக்கதே. இது இருக்குமாயின் தனிகரென்றும், ஐசுவரியவான்களென்றும் திரவிய முடையாரென்றும் பலவகையாக அழைக்கப்படுவர் மனிதர். இது நீங்குமாயின் அன்னார் தரித்திரர், ஏழைகள், வறியர் என்றபெயர்கள் பெறுகின்றனர். அறுசுவைப் போசன பதார்த்தங்களை மனையாள் ஊட்டுதல்செய்ய உண்ட செல்வர்களும் ஓரிடத்திற்போய்க் கூழை இரந்துண்பாராகில் செல்வமானது ஒரு பொருளாக வைக்கும் பகுப்புள்ளதல்ல.

"அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண்டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று"

அரும்பதக்கொத்தில் **சிகை** யென்பதற்கு 'பதார்த்தம்' என்றும், அது மென்மை வலிமை என விருவகைத்தென்றும் கூறியுளர். வேறு சிலர் பிடி சோறு, படைத்த சாதம் இவையும் அதன்பொருளாமென்பர். எங்ஙனமாயினும் ஆகுக. செல்வர்கள் வன்மையான பதார்த்தங்களை வருத்தமுற்றுக் கடித்துண்ணுதலரிதாகலின் அவற்றை நீக்கி மென்மையான பதார்த்தங்களைக் கொள்ளுதல் வழக்கம். இது பற்றியன்றோ

"பருவ மெனத்துள பல்லின் பாலேனை
இருசிகையு முண்டீரோ"

என்று வயதினளவையும் பற்களின் வலியினளவையுங் குறிப்பிட்டுக் கூறியிருக்கின்றனர்.

2. காமம் பொறுத்தல் கடுமை:-உலக வழக்கில் ஆடவரினும் பெண்களுக்குக் காமவாசை மிகுதியென்பர். தங்காதலைத்தாமே கண்ணாலும் முறுவலாலுங் காட்டுவரே யன்றித் தம் வாயாற் பிதற்றுதலரிது. இது காதலருள்ள விடத்தே. பிரியின் பூட்டிட்ட வாய்திறந்து புலம்பும். தங்குற்றங்காணமல் பிறர்மேல் குற்றத்தைச் சாட்டும். காதலன் பிரிவாற்ருமையைத் தோழிக்குத் தலைமகள் கூறுவது இஃதாம்.

"கண்மூன் றுடையானுங் காக்கையும் பையரவு
மென்னீன்ற வாயும் பிழைத்ததென்—பொன்னீன்ற
கோங்கரும் பன்ன முலையாய் பொருள் வயிற்
பாங்கனார் சென்ற நெறி."

தன்துயருக்குக் காரணர் சிவன், காகம், இராகு, தன்னன்னை என்றனள். எங்ஙனமெனில், மன்மதனை யுருவழித்துப் பின்னர் உருவாக்கிவிட்டவர் சிவனாதலால் மன்மதபாணவதை பொறுக்கிலேன்.

கண்ணிலாதமனப்பிணிகருத்திடைபொருத்திடின்மனத்
தெண்ணிலாதுயிரிறுத்திடுமிடத்தினுமிடுக்கணுறுவார்"

சந்திரமதி மன்மதனைப் பழித்துக்கூறுமிடத்து இங்ஙனங் கூறுகின்றாள். உன்னையெரித்து உருவமில்லாதவனாகச் செய்த சிவபிரானை நீ கொல்லச் செல்வது உனக்கு ஆண்மைத்தனமே யல்லாமல், வேறே நீ யாரைக் கொல்லத்தக்கது. பெண்பிறப்பைக் கொண்ட என்னை நீ கொல்லத் தொடங்குகிறது அறிவின்மையே யாகும்.

"உன்னைக் கொன்றன் றுருவிலியாக்கினான்
றன்னைக் கொல்லுவ தாண்மைத் தனமலாற்
பின்னைக் கொல்வதென் பெண்பிறப்பாகிய
வென்னைக் கொல்லுவ தேழைமைப் பாலதே".

முன்னொரு காலத்தில் சிவபெருமான் யோகத்திலிருக்க அதனைக் கெடுக்க முயன்ற தேவர்கள் ஏவுதலால் மன்மதன் சிவபெருமான் மேல் மலர்க்கணை தொடுத்தனன். அப்பொழுது இறைவன் சினங்கொண்டு விழிக்க மன்மதன் எரிந்து சாம்பராயினன். இதனால் இறைவனுக்குக் காமதகனன் எனப்பெயருண்டாயிற்று. அங்ஙன முருவழித்த மன்மதனுக்குக் கருணை புரிந்து வுருக்கொடுத்ததனால் அவன் கொடுமை சகிக்கக்கூடவில்லை.

காகம் எங்ஙனந்துயர் விளைத்ததெனின், நாள் வரவைக் காட்டுங்குறியஃதாம். காகத்தைக் குயில் வளர்க்காமற் கொன்றிருந்தால் நாட்போக்குத் தெ

ரியாதிருக்கும், தலைவன் வருவானென்ற எண்ணத்தைக் கொடுத்து வதை செய்யாதிருக்கும்.

இராகு சந்திரனை விழுங்கியிருந்தால் சந்திரிகையால் மனவருத்த முண்டாகாது. விழுங்கி வெளிவிட்டதால் துயரத்திற்குக் காரணமாயது.

தாய் தன்னைப்பெற்ற காலத்திலே கொன்றிருந்தால் தனக்கு இத்துயரம் வந்திருக்காது, தன்னை நாளொரு மேனியாய் காதற்பருவம் வரை வளர்த்ததே அவள் பிழை.

திரவியம் பிள்ளை

WIVING GOES BY DESTINY.

அமைப்புப் படியே மணம்.

ஊழின் வழியே உலகநடக்கை. அவனன்றி யோரணுவு மசையாது இவை முதியோர் அநுபவம். ஜெகப்பிரியராகிய ஷேகஸ்பியர் நாடகத்தில் இதைப்பற்றிக் கூறியுதகரிக்கின்றனர். வெனிஸ் வர்த்தகன் என்ற நாடகத்தில் போர்ஷியா பசானியோவின் மேல் காமங்கொண்டதற்குக் காரணம் ஊழ் என்பது விளங்குகின்றது. எவ்வாறெனில், இம்மாதின் தந்தை மரணத்தருவாயில் சீட்டொன்று எழுதிவைத்தனர். அதில் தங்கம், வெள்ளி, ஈயம் இவற்றால் மூன்று செப்புக்கள் செய்து அவற்றில் ஒன்றில் மட்டும் இவள் படத்தை வைக்கும்படிக்கும், எவன் இச்செப்பைத் தொடுகின்றானோ அவனையே இவள் வதுவை செய்யவேண்டுமென்றும் ஆக்கினை செய்தனர். தந்தை சொன்மிக்க மந்திரமில்லையாதலின் போர்ஷியா அங்ஙனமே செய்யவுடன் பட்டனள். பேதை மனது பயந்தாலும் ஊழிற் பெருவலியாவுளவென்று திடங்கொண்டனள். கடவுளமைப்புப்படியே கடிமணம் நடக்குமாதலின் பசானியோ தன்னை மணக்கவதிர்ஷ்ட முடையானாயின் படமுள்ள செப்பைத் தொடுவான் என்று மனவுறுதி செய்தனள். எண்ணியவாறே முடிந்தது. இருவரும் இன்பமுற்றனர்.

சந்திரமதியைப்பற்றியும் இத்தகைய கதையொன்றுளது. அவளுடைய பிதா சந்திரதயவரசன் புத்திரப்பேற்றை விரும்பிப் பெரிதுந் தவங்கிடந்தபோது சிவபெருமான் அவன் முன்றோன்றி, 'அரச! நீயாற்றிய தவத்துக் குளமகிழ்ந்தோம். நினக்கு பிறக்கையிலேயே மாங்கல்ய சூத்திரத்தோடு கூடிய ஒரு பெண்மகவுதோன்றும். ஆயினும் மாங்கல்யம் பிறர் கண்ணுக்குத் தோன்றாது. அதனைத் தெரிந்து கூறுமுத்தமனெவனோ அவனே அவட்குரிய கொழுநனவன். அவ்வொரு பெண்ணால் நீ பெரிதுங் கீர்த்தியடைவை. அங்ஙனமே இலட்சுமிக்குஞ் சிறந்த சந்திரவதி பிறந்தனள், வளர்ந்தனள்,

விவாககாலம் நெருங்கியது. அரசரனேகர் இவளைக் கல்யாணஞ் செய்துகொள்ள விரும்பினர். அவர்கட்கெல்லாம் அரசர் "முன்ன மெம்பெருமான் மொழிந்தவர்க்கன்றி முடிக்கிலேன் கடிமண" மென்றார். அரிச்சந்திரனொருவனுக்கே அவள் மாங்கல்ய சூத்திரந்தோன்றியது. வனப்பு மிகுதியால் மயங்கினனேனும் மாங்கல்யந்தரித்தவளை மணத்தல் பெருந்தவறென்று எண்ணினன். சிறிய ஜாதியார் இங்ஙனம் கல்யாணஞ்செய்துகொள்வதுண்டு, அரசர் அதற்குடன்படார். எப்படி சுயம்வரம் நாட்டினீர்களென்று மகாராஜன் வினவினன்.

"பொறுத்துமுன் மங்கலம் பூண்ட பேதையை
மறுத்திரண் டாவது மண முடிப்பரோ
சிறுத்தவர் செய்தொழி றிரைவரைப்பிதி
னிறுத்தினீர் நீரெனு நெடிது கூறினன்".

அதைக் கேட்டு ஆண்டுக் குழுவியிருந்த அரசர்கள் கைகளைத் தட்டி அதிசயித்து மூக்கிலே விரல் வைத்தனர். அப்பொழுது சந்திரதயவரசன் அரசர்களை நோக்கி, 'அரசர்களே! இந்தப் பூ மண்டலத்தை யாளுகின்ற அரிச்சந்திர மகாராஜன் எங்கள் பெண்ணின் கழுத்தில் தாலியிருக்கக் கண்டதற்கும் நீங்களெல்லாருங் காணாதிருப்பதற்கும் ஒரு தேவரகசியமுண்டென்று சொன்னார். அஃதாவது பரமசிவனார் கொடுத்த வரத்தினாலே இவள் பிறந்த நாள் முதல் கண்ணாடி நிழலிலே இவள் மங்கிலியத்தை நாங்கள் பார்த்ததேயன்றி அது சந்திர வதியின் கைக்கு அகப்பட்டதில்லை. கூறியதும் வேறேயொரு பெயரையும் தன் மனத்தில் நினையாத சந்திரவதி, இந்த மாலைபோய் அரிச்சந்திரன் மார்பிலே விழக்கடவதென்று ஆகாயத்தில் எறிந்தனள். அது அந்த மகாராஜன் மார்பிலே கூடிப் பிரகாசித்தது.

"அண்டர் நாயகன் வரமளித்த நாளையில்
வண்டணி குழலியோ டுதித்தமங்கலங்
கண்டவர் பதியிவட் கென்ற கட்டுரை
யுண்டஃதன்றிவே றுண்டு கேட்டிரால்.

"மஞ்சனச் சடையினன் வரத்தில் வந்தநாள்
கஞ்சன நீழலிற் காண்பதன்றியே
யஞ்சனக் கண்ணிக்கு மங்கைக் கெய்திடா
தெஞ்சலில் யாவரு மியானுங் கண்டிலேம்.

"என்றலும் வல்லிமு னெண்ணிய நாம
மொன்றல துள்ளுற வுன்னல ளாகிச்
சென்றவன் மார்பிது சேர்கென வுன்னா
மன்றலர் மாலையை வானிலெறிந்தாள்.

"வார்பயில் பூண்முலை மாலையு நெஞ்சும்
பார்பயின் மன்னவர் பற்பலர் கண்ணுந்
தார்பயில் வேலரிச் சந்திர னென்பான்
மார்பிலணைந்து மலர்ந்தன மன்னே."

பெருமாள் நாயுடு.

HARISCHANDRA'S DREAM.
அரிச்சந்திரன் கனவு.

கனாக் காணுதற்குக் காரணங்கள் பலவுரைப்பர். சிலர் துவரப்பசியா திருத்தலென்றும், உஷ்ண மிகுதியென்றும், பகல் நினைவென்றும் வேறு சிலர் தெய்வீக வருமுன்குறி யென்றும் கூறுவர். வாஸ்தவத்தில் ஊண் மிகு தியால் இலகுவில் சீரணமாகாமல் கனாக் காண்பதுண்டு. எதைப் பகலில் சிந்திக்கிறோமோ அதே இரவில் காணுவதும் வழக்கம். சில சமயங்களில் நடக்கப்போகும் சங்கதிகளைக் கனவில் காண்கின்றோம். விடிந்தவுடன் நான் இன்னவிதமாய்க் கனவுகண்டேன் எனவும் அவ்விதமாகவே சம்பவித்திருக் கின்றது எனப் பிறர் சொல்லவும் கேட்டிருக்கின்றனம். கனாவிற்குப் பொருளு ரைத்தல் எளிதன்று. பணம் பணமாய் வழியெங்கும் கிடப்பதை ஒருவன் கனாக் கண்டால் அது எதிர் மறையாகிய தரித்திரம் வருதலைக் காட்டுமென் பர். கல்யாணக் கனாக்கண்டால் நெய்தற் பறையொலி பின்வரும். விவிலிய நூலில் பெல்ஷாஸர் கனாக் கண்டனரென்றும் அதன்பொருளை விளக்க வந்தனர் பலரென்றும் டேனியலின் உரையே சிறந்திருந்ததென்றும் வாசித் திருக்கின்றோம். உவில்லியம் மாரிஸ் என்பவர் கிரீஸஸ் மகன் என்றகதையில் அரசன் வேட்டையாடி யுயிர் இழப்பன் என்று கனாக் கண்டவாறே சம்ப வித்ததென்று கூறியுளர். இது போன்ற கதைகள் பலவுள. அரிச்சந்திர மகாராஜனும் தம்மைப் பெற்று வளர்த்த தந்தை தேகத்துடனே சுவர்க்க லோகத்திற்குப் போய்த் தேவர்களால் தள்ளுண்டு நட்சத்திர மண்டலத்தில் நிலை கொண்டிருந்த பின்புதாம் தேன் பொருந்திய மலர் மாலை சூடிய பெண்களைந்து பேரைப் பூர்வபுண்ணியத்தொடர்ச்சியினால் கூடிக் சுகித்திருக் கக்கண்டனர். அவ்வைந்து மாதர்களில் ஒருத்தியை தாமே அருமையான தவ முனியொருவருக்கு சம்மதித்துக் கொடுத்ததாகவும், மற்றொருத்தி தா னே போய் அம்முனிவரோடு கூடினதாகவும், மூன்றாமவள் உணவு முதலி யன இல்லாமற் போயினளென்றும், வேறொருத்தி தானே விலகிப்போய்க் கண் குருடானாளென்றும், விட்டு நீங்காத ஒரு மாது மாத்திரம் இம்மையி லும் மறுமையிலும் தமக்கு நன்மை தருவதாயிருந்தனளென்றும் கனவு கண் டோமென்று அரசன் கல்விகேள்விகளாற் சிறந்த சத்தியகீர்த்தியாகிய முதல்

5

மந்திரியிடஞ் செப்ப அவர் அதைப்பின் வருமாறு விளக்கினர். 'நீர் கனவிலே கண்ட வருந்தவர் விசுவாமித்திரர். நீர் அருத்தியிற் புணர்ந்த மாதர் ஐவரும் பஞ்சசத்திகள். அவருக்குக் கொடுத்தவொருத்தி பஞ்ச பூதமாக நிற்கின்ற கிரியா சத்தியாகிய பொருள். ஒருத்திபோய் அவரோடுற்றது வினைத்துணையாக நிற்கின்ற கிரியா சத்தியாகிய அரசாட்சியே. ஒருத்தி பூணற்றகன்றது பிராணன் முதலிய வாயுக்களாக நிற்கிற பராசத்தியே. அதாவது, வளமையான நகர் நாடு முதலியவைகளை விட்டுத்தேக மெலிவாகுதல். ஒருத்திபோய்க் கண்ணிழந்தது ஐம்பொறி நுகர்ச்சியாக நிற்கிற ஞான சத்தியே. அதாவது, செல்வத்தையு மிழந்து பிள்ளையும் மனைவியும் வெவ்வேருகுதல். இப்படி வெவ்வேறான பெரிதான தீயசெய்கையை முடிக்கிற விசுவாமித்திரனைப் பின்பு நாமே வெல்லக்கடவோம். ஒருத்தி நீங்காமலிருத்தலுக்கு உறுதி தருதல் விவேகம். இதை உயிர்க்கு ஒளியாக நிற்கிற சிற்சத்தி யென்று கொள்ளவேண்டும். 'பரையாதி வினைப்பரிவு தொழிலாகி யுலகனைத்தும் படைத்துக் காத்து, வரையாது தொடைத்து மறைத்தருளி' யென்பதனுலுணர்க வென்று முதன் மந்திரி கூறினர்

"என்னை யீன்றெடுத்த தாதை யாக்கையோ டெய்தியும்பர்
தன்னை யுற்றிமையோர் நீக்கத்தாரகைத் தலத்தமர்ந்த
பின்னையான் பிரசக் கூந்தற் பேதைய ரைவர்தம்மை
முன்னையூழ் விதியினலே முயக்கமுற் றினிதிருந்தேன்."

"அருத்தியிற் புணர்ந்த மாத ரைவரிலருந்தவத் தோற்
கொருத்தியை யீந்தே னொருத்திபோய வனேடுற்று
ளொருத்தி பூணற்றகன்று ளொருத்தி போய்க்கண்ணிழந்தா
ளொருத்திவிட் டென்னை நீங்காதிருமைக்கு முறுதிதந்தாள்."

"இப்படியின்று கண்டேனிக் கொடுங்கனவினலே
யெப்படி விளைவதோவஃதுணர்ந்திலே னியம்புமென்ன
வப்படி யரசன் கூறவடியிணை தொழுது நன்னூற்
றப்பற வுணர்ந்த கேள்விச் சத்திய கீர்த்தி சொல்வான்."

"அருவினை விளைத்ததெல்லாங் கௌசிக னவனலின்னம்
வருவினை மிகவுமுண்டு வளநகர் நாடிழந்து
திருவினை யிழந்து சேயுஞ் செல்வியும் வேறு வேருப்
பெருவினை முடிப்பான்றன்னைப் பின்னையாம் வெல்வோ மென்றான்".

கனவிற் கண்டபடியே துன்பங்களனைத்தும் அரிச்சந்திரனை வதைத்தன. அரசர் பதியை யிழந்தனர், பாலனை யிழந்தனர், படைத்த நிதியை யிழந்தனர், மனைவியை விற்றனர், சத்திய மொன்றைமட்டுங் கைவிடாது பற்றினர், அதுவே அவர் தலையைக் காத்தது.

முனிசாமி.

NAYANMAR SIN THIRUVACHAKAM.

திருவாசகத்தில் நாயன்மார்கள்.

---

1. **கண்ணப்ப நாயனூர்:**—இவர் தொண்டை நாட்டில் திருக்காளத்தியென்ற ஸ்தலத்துக் கணித்தாயுள்ள உடுப்பூரில் வாழும் வேடர் குலவரசனுகிய நாகனென்பவர் செய்த தவத்தால் அவருக்குப் புத்திரராகப் பிறந்தனர். இவருக்குத் தாய்தந்தையரிட்ட பெயர் திண்ணனுரென்பதே. இவர் இளம்பிராயத்திலேயே வில்வித்தை பயின்றனர். வேடர்களுடன் காட்டிற் சென்று வேட்டையாடி வந்தனர். ஒரு நாள் ஒரு பன்றியானது வேடர்களையும் வலைகளையுந் தப்பியோடுவதைக் கண்டு இவர் துரத்தி அதனைச் சுரிகையாற் குத்திக்கொன்றனர். அப்போது தம்முடன் வந்த நாணன், காடன் என்ற இரண்டு வேடரும் அதிசயித்து, 'அச்சனே! இந்தப்பன்றியிறைச்சியை நீவிருமுண்டு எங்கட்குங் கொடுத்தால் சிறிது பசியாறுவோம்' என்றனர். நல்லதென்று சம்மதித்து எல்லோரும் பொன்முகலியாற்றின் கரைசேர்ந்தனர். அப்பொழுது நாணன் திண்ணனுரை நோக்கி, 'இந்த மலையின்மேல் குடுமித்தேவரிருக்கின்ருர். ஆண்டுச் சென்ருல், அவரைத்தரிசிக்கலா' மென்றனன். உடனே திண்ணனுர் 'செல்வோம்' என்றனர். இருவரும் மலையேறினர். எறும்போதே கண்ணனுருக்கு அன்புபெருகி ஆனந்தக் கண்ணீருஞ் சொரிந்தது. பரவசமடைந்து சுவாமியைப் பார்த்து, 'தேவரே! வேடர் போன்று தனியே யிருக்கின்றீர், இறைச்சி கொண்டு கொடுப்பாரில்லை! நான் கொண்டுவருகிறேன்' என்று திண்ணனுர் சொல்லிக்கரையில்விட்ட பன்றியின் தசையை அம்பினுற் கொத்தியெடுத்துத் தீவளர்த்துத் தீயிற்காய்ச்சி வாயிலிட்டுப் பக்குவம் பார்த்துத் தேக்கு இலையைத்தைத்து அதில் வைத்துத் தேனும் விட்டுப் பொன்முகலிநீர் வாயினிடத்தும் திருப்பள்ளித் தாமம் சிரசினிடத்தும் வைத்துக்கொண்டுவந்து சுவாமி திருமுடியில் சிவகோசரியார் அருச்சனை செய்த பத்திரபுட்பங்களைத் தமது காலில் தொடுத்திருக்கும் பாதரக்ஷையால் மாற்றி வாய்நீர் மஞ்சனஞ்செய்து முடியிலிருந்த பத்திரபுட்பங்களைச் சாத்தித்தையலிலைத் தொன்னையை எதிரில்வைத்து, 'சுவாமி! இது பக்குவமுள்ள இறைச்சி. நானுமென்று பார்த்தேன், தேனுங்கலந்திருக்கின்றது, அமுது செய்தருளும்' என்று பகர்ந்து அமுது செய்வித்தனர். இவ்வாறே ஐந்து நாள் செய்து வந்தனர். இரவெல்லாம் நித்திரையின்றிக் காவலிலமர்ந்தனர். தம்முடைய செயலால் சிவகோசரியாருக்கு மனவருத்த முளதோ வென்றறிய விரும்பி 'இது தேவரீர் திருவுள்ளத்திற்குப் பாங்குதானே' என்று கேட்டனர். எழாம் நாளும்வந்தது. திருக்கண்ணென்று சிவந்து உதிரமொழுகியது. நாயனுர் அதைப்பார்த்து வருந்தி பச்சிலை மூலிகைகளைப் பிசைந்து விட்டும் தீர்காமையால் தம்முடைய வலக்கண்ணைப் பெயர்த்து அப்பினுர்.

உடனே உதிரம் நின்றது. பின்னும் நாயனர் பக்தியைச் சோதித்தற் பொருட்டு மற்றொரு கண்ணினின்றும் இரத்தமொழுகச் செய்தனர். இதைப் பார்த்து நாயனர், 'நான் அஞ்சேன், என்னிடம் மருந்திருக்கின்றது' என்று சொல்லி தம்முடைய மற்றொரு கண்ணைப் பாணத்தினற் குத்திப் பெயர்க்கத் தொடங்கினர். காளத்தீசர் திருவுள மிரங்கினர். அன்பர் கையைத் திருக்கரத்தாற் பற்றினர். கண்ணப்ப நிற்கவென்று திருவாய் மலர்ந்தருளினர். எப்பொழுதும் நம்முடைய வலப்புறத்திலிருக்கக் கடவை என்றருளினர்.

"கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப்பணித் தென்னைவாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ."

2. சண்டேசுர நாயனர்:—இவர் பிறந்தவிடம் சோழ நாட்டிலுள்ள திருச்சேய்ஞலூர். இவர் குலத்தாற் பிராமணர். இவர் காசிபகோத்திரத்தவர். எச்சதத்தனென்பவருக்கு மைந்தராயுதித்தனர். இவருக்குப் பெற்றோரிட்ட பெயர் விசாரசருமர். ஐந்துவயதிலே பூர்வஜெனனவுணர்ச்சியால் வேதாகம சாத்திரங்களை யெல்லாம் ஓதாதுணர்ந்தனர். எழுவயதில் உபநயனச் சடங்கைத் தந்தை செய்வித்து வேதமோதுவிக்க சிறிதும் வருத்தமன்னியில் ஓதுவிப்பதற்கு முன்னுணர்ந்தனர். உபாத்தியாயர் இதைக்கண்டு அதிசயித்தனர். சிறுவர்களுடன் வதப்பள்ளிக்கூடம் போய்வந்தனர். ஒருநாள் வழியில் இடையனை ஒரு பசுவானது முட்டிற்று. உடனே அவன் அப்பசுவைத் தடியாலடித்தனன். அதைக்கண்டு மனம் வருந்தி விசாரசருமர், 'நீபசுக்களை என்னென்று நினைத்தாய்! திரிமூர்த்தி முதலான தேவசொரூபமுள்ளதுமன்றிப் பரமசிவத்தின் திருமஞ்சனத்துக்குரிய பஞ்சகவ்வியத்தையும், விபூதிக்குக்காரணமான சாணத்தையுந் தருவதனல் அதனையடித்தால் மகாபாதகம் நேரிடும். ஆனதால் நீயவைகளை மேய்க்கவேண்டுவதில்லை. இன்றுமுதல் நானே மேய்க்கிறேன்' என்று சொல்லி அப்பசுக்களின் சொந்தக்காரரின் சம்மதத்தையும் பெற்றனர். அன்று முதல் பசுக்களெல்லாம் பெருகி பால்மடி சுரந்து பொழிந்தது. அதைக்கண்ட சருமருக்கு பரமசிவத்திற்குப் பாலபிஷேகஞ் செய்யவேண்டுமென்ற வெண்ணமுண்டாயிற்று. இவர் மண்ணியாற்றங்கரையில் ஆத்திமரத்தின்கீழ் மணலினல் சிவலிங்கமும் ஆலயமுஞ் செய்து தாமமுங்கொய்து ஒவ்வொரு பசுமடியினின்றொழுகும் பாலைக் குடங்களிலேந்தி அபிஷேகஞ் செய்து துதித்து வந்தனர். இதைப்பார்த்த பிராமணர் ஒருவர், இந்தசருமர் சிறுபிள்ளைத் தன்மையால் பாலைக்கறந்து மணலிலூற்றி விடுகிறுனென்று நினைத்து ஊரிலுள்ள பிராமணர்களிடஞ் சொற்றனர். அவர்கள் சருமர் பிதாவிடம் அறிவித்தனர். அதற்கு, 'நான் நாளைக்குப் போய்ப் பார்க்கிறேன்' என்று விடைகொடுத்தனர். அங்ஙனமே

மறுநாள் குராமரத்தின் மேல் மறைந்திருந்து சருமர் செய்த அபிஷேகத்தைக் கண்ணுற்று வெகுண்டு இறங்கிவந்து கோலால் சருமர் முதுகிலடித்தனர்.

பக்தி மிகுந்த மைந்தருக்கு அடி உறைக்கவில்லை. தம்பணிவிடையைச் செய்துகொண்டிருந்தனர். பின்னும் கோபங்கொண்டு தந்தை பாற்குடங்களைக் காலினால் இடறிச்சிந்தினர். அதுசருமருக்குப் பொறுக்கவில்லை. தம்மருகிருந்த கோலை யெடுத்து அதுவே மழுவாயுதமாகத் தந்தையின் இரண்டு கால்களையுந் துணிக்க அவர் மண்மேல்விழுந்தனர். அவரைச் சட்டை செய்யாமல் புதல்வர் அர்ச்சனையிலமர்ந்தனர். அத்தருணம் பரமசிவன் பார்வதி சமேதராய் யெழுந்தருளினர். அன்பர் வணங்கினர். அவரை நோக்கி, 'நீ நம் பொருட்டு ஈன்ற தாதைவிழ எறிந்தனை, ஆதலால் இனி நாமேயுனக்குத் தந்தை' என்று அணைத்து உச்சிமோந்து மகிழ்ந்து தொண்டர்களுக் கெல்லாந் தலைவராகு முறைமையளித்து, 'நாமுண்ட பரிகலமும், உடுப்பவைகளும், சூடும்பூமாலைகளும் உனக்கே தக்கதாகக்கடவது, தண்டீசன் என்னும் பதமுந்தந்தோம். இந்தக் கொன்றை மாலையைச் சிரமீது கொள்வாய்' என்று சொல்லி சிவலோகஞ் சென்றனர். தண்டீசரு முடன் சென்றனர். தந்தையும் சிவ அபராதம் நீங்கி சுற்றத்தாருடன் முத்தியடைந்தனர்.

" தீதில்லைமாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் றாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப வீசன் றிருவருளாற்றேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம் "

(இன்னும் வரும்)

வேங்கடாசலம்.

THE POETIC USES OF FLOWERS: II.

அனிச்சம்.

இந்த மலரின் மென்மையே கவிவாணராலெடுத் தாளப்பட்டுளது. இது தொட்டால் வாடும், முகந்தால் குழையும். ஸ்திரீகளின் பாதமிதைப்போன்று மென்மையா யிருக்குமென்பர் பாவலர் பலரும். திருவெண் காடரும்,

" தேவர்
மடவரன் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர்தீண்டிடச் சிவந்து
பஞ்சியுமனிச்சமு மெஞ்சவெஞ்சாத்
திருவொடும்பொலியு மொருபாற் றிருவடி"

என்றனர். திருவள்ளுவர் விருந்தினர் அனிச்சப்பூவினு மெல்லியர் என்றுளர். ஏனெனின் தூரத்திற் கண்டவிடத்து முகமலர்ச்சி காட்டலும், அதுகண்டு சமீபத்திலே வந்தவிடத்து இன்சொற் சொல்லுதலும், அதுகேட்டு உடன்பட்டபோது உபசாரஞ் செய்தலும் ஆகிய விருந்தோம்புவார்க்கு அவசியமிருக்கவேண்டிய மூன்றனுள் முதலதாகியமுகமலர்ச்சியில்லாதபோது தூரத்திலிருந்தே வாடிநீங்குதலால் தீண்டியவிடத்தல்லது வாடாத அனிச்சப்பூவினும் மேன்மையுடையார் விருந்தினர்.

"மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

எல்லாப்பூவினும் அனிச்சம் மென்மையாற் சிறந்த தென்பதைக் காட்டி அதனினும் மெல்லிய குணத்தை யுடையவள் தான் விரும்பப்பட்டவள் என்று தலைவன் கூறியதைக் காண்க.

"நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு
மென்னீரள்யாம்வீழ் பவள்"

தலைவன் பகலிலே ஓரிடங்குறித்து வைத்து அவண் தலைவியுடன் கூடிய காலத்து அவளணிந்த பூவைக்கண்டு, இவள் அனிச்சமலரின் தாளைக்களையாமல் தரித்ததால் இவளிடை பாரம் பொறுக்காமல் முரியும், என்று பயந்தனன்.

"அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை"

ஸ்திரீகளின் பாத மென்மையாதலால் பாலைவழிநடத்தல் கடுமை. உலகத்தாரால் மென்மையாகக் கொள்ளப்பட்ட அனிச்ச மலரும் அன்னப் பறவையினிறகும் மாதர்களடிக்கு நெருஞ்சிமுள் போன்றும் என்று தோழி தலைவியைத் தலைவனுடன் போகச்சொன்னபோது அவன் விடை விடுத்தனன்.

"அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்"

(இன்னும் வரும்)

பூர்ணலிங்கம் பிள்ளை.

EDITORIAL NOTES.

பத்திராதிபர் குறிப்புக்கள்.

நாகரீகத்தின் சரித்திரம்:—பக்கிள் என்பவராலாக்கப்பட்ட 800 பக்கங் கொண்ட இச்சரித்திரத்தை மூன்றரை ஷில்லிங்கு விலைக்கு ரவுட்லெஜ் கம்பெனியார் பதிப்பிக்கின்றனர்.

*

தாமஸ் ஹார்டி என்பவர் மூன்று பாகங்களுள்ள டைனஸ்டோவென்னுஞ்சரித்திர நாடகத்தின் முதல் பாகத்தை வெளியிட்டிருக்கின்றனர். முதற்பாகத்தில் நெப்போலியன் இங்கிலாந்தின்மேல் படையெடுத்தல் முதல் நெல்சன், பிற்று, மரணம் வரையுள்ள விஷயங்கள் அடங்கும். இரண்டாம் பாகத்தில் நெப்போலியனுடைய உன்னத வதிகார நிலையையும், மூன்றாம் பாகத்தில் அவ்வீரனுடைய வதிகாரந் தாழ்ந்து படுதலையும் காட்டப்படும்.

*

சுவின்பர்ன்:—என்ற வாங்கிலக் கவிவாணன் பிணிவாய்ப்பட்டிருப்பதாகக் கேட்டு விசனிக்கின்றோம். இவர் அநேக கவிகளையும் நாடகங்களையும் ஆக்கியுளார். வாசக நடையிலுள்ள இவருடைய ஆராய்ச்சிகளெல்லாஞ் சிறந்தனவே. இவருடைய வித்வசகாக்களனைவரும் முன்னரே நாடு நீங்கினர்.

*

மேற்றிசை நாகரீக மூலாதாரங்கள்:—இப்பெயர் வாய்ந்த நூலையாக்கியோர் மாட்ரிடு சர்வகலாசாலையைச் சார்ந்த டாக்டர் சேல்ஸ்பெருவென்ற பண்டிதர். இதை சேம்பர்லெயின் ஊன்றி வாசித்தனராம்.

*

ஐரோப்பிய ஆட்சியின் வளர்ச்சி:—கேம்பிரிஜ் சர்வகலாசாலைப் பண்டிதராயிருந்து காலஞ் சென்ற சிட்ஜ்விக் பண்டிதர் ஷை சர்வகலாசாலையில் செய்த பிரசங்கங்களைத் திரட்டி அவர் மனைவி அவற்றை மேற்காட்டிய நாமகரணத்துடன் அச்சிடுகின்றனர்.

*

மிஸ்டர் கிளாட்ஸ்டன் மகனுக்கு வரைந்தனுப்பிய புத்திமதி:—நாம் பொருளையும் காலத்தையும் உபயோகப்படுத்துவதில் ஒருவித எற்பாட்டைப்பின் பற்றுதலால் பெருத்த லாபமுண்டாம். நம்முடைய வருமானத்தில் திட்டமான ஒரு பகுதியைத் தர்மவிஷயங்கட்குச் சமர்ப்பித்தல் அறிவுடைமையாம். இங்ஙனம் செய்யத்தொடங்குதல் முதிர்ந்த வயதினும்வாலிபத்திலேயே எளிதாம். இவ்விதமாகச் சிறியதொகை சேர்த்து வைப்பதினுலுண்டாகும் பெரும் லாபம் யாதெனில், நம்மிடம் யாசகம் கேட்குங் காலத்தில்சுயலாபமும் தர்மமும்முரணுது நானுவித தர்ம மதவிஷயங்களில் சிறந்தன எவையென்று விவரமாய்த் தெரிந்து கொடுத்தலே. தருமத்திற்காக எற்படுத்தும் தொகையானது நமது வருவாயுள் பத்தி லொரு பங்குக்குக் குறையாதிருத்தலே விரும்பத்தக்கது. அதனால் மற்று ஒன்பது பாகங்களும் தெய்வ கடாக்ஷம் பெறுகின்றன.

சென்னைபுரி அன்னதான சமாஜ மஹோற்சவம்:—இந்த சமாஜம் ஏற்பட்டுப் பதின்மூன்று ஆண்டுகள் கழிந்தன. பிப்ரவரி மாதம் 17வ யன்று நடந்த மஹோற்சவத்திற்கு சென்னைக் கவர்னரவர்கள் சபா நாயகராக வந்திருந்தனர். அவர்கள் தர்ம விஷயத்தைப்பற்றிச் செய்த உபந்யாசத்தை இவண் சுருக்கி வரைகின்றோம். இந்துமத சாஸ்திரங்களெல்லாம் தர்மத்தைச் சிறப்பித்துக் கூறுகின்றன வென்பதை நான் அறிவேன். தத்துவ ஞானிகளும் மத ஞானிகளும் இதைப் பழிப்பார்கள். குருக்கள்மார் சுய லாபங்கருதியே தர்மம் செய்யும ஏற்பாட்டைச் செய்தனர். இந்தியாவில் மிகுந்து பெருகி வரும் தர்மத்தினால் யாசகமும் பெருகிவருகின்றது. மனு ஏற்பாட்டின் படி இந்தக் கலியுகத்தில் தர்மமே மேன்மையானது. கிரேதாயுகத்தில் தெய்வ ஞானமும், துவாபர யுகத்தில் யாகங்களும், கலியுகத்தில் தர்மமும் சிறப்புறும் என்னும் மனுசாஸ்திரம். இந்துக்கள் அபிப்பிராயப்படி தர்மம் செய்தல் ஏழைகளுக்கு உணவு அளித்தலாம். செண்ட் பால் என்பவரும் மதவிசுவாசம், நம்பிக்கை, தர்மம் இம்மூன்றினும் தர்மமே மிகச் சிறந்தது என்றனர். மற்றோரிடத்தில் எனக்கு மலையை நகட்டும் சக்தி யிருந்தாலும் தர்ம சிந்தனையில்லாத பக்ஷத்தில் நான் ஒன்றுமில்லாதவனென்று கூறியிருக்கின்றனர். இந்தியர்கள் தர்ம சிந்தனையும் தயாளமும் உள்ளவர்களல்லரென்று அநேக ஆங்கிலேயர் அபிப்பிராயம் கொள்ளுகின்றனர். இதற்குக் காரணம் இந்தியர்கள் தர்மம் செய்யும் வழிகள் அன்னார்க்குப் புலப்படாமையே. பள்ளிக்கூடங்களுக்கும் மருந்தளிக்கும் சாலைகளுக்கும் இந்தியர்கள் பணங்கொடாமல் அவற்றை உபயோகப்படுத்துகின்றனர் என்பர் மேற்றிசையார். ஆனால் புராதன வழக்கப்படி இந்தியர்கள் ஏழைகளுக்கும் வியாதிஸ்தர்களுக்கும் உதவிசெய்து வருகின்றனராதலால் இந்தியாவில் அறக்கூழ்ச்சாலை விதி ஏற்படுத்துமவசியம் இல்லாதிருக்கின்றது. இந்தியாவிலேற்பட்ட வழக்கம் மாறாமல் நடந்துவருகின்றது. ஐரோப்பிய தேசங்களிலோ ஏழைச்சட்டங்களும் தர்ம ஏற்பாடுகளும் அடிக்கடி மாறி வருகின்றன. இந்தியாவில் நடந்துவரும் தர்மமுறை இந்தியருக்குச்சரி. ஏனெனில், இத்தேசம் சீர்திருத்தங்களுக் கிணங்காது அடிக்கடி மாறும் ஐரோப்பிய ஏற்பாடுகள் மேன் மேலும் விருத்தியாகும் ஐரோப்பாவுக்குச்சரி. இந்தியர்களும் ஆங்கிலேயர்களும் இந்த நாட்டில் ஒன்றாய்க் குடியிருப்பதாலும் ஐரோப்பியர் கருத்துக்களநேகத்தை இந்தியர்கள் கற்று வருவதாலும் ஆங்கிலேயர் இந்திய வாழ்க்கையின் முக்கியமான அம்சங்களையுணர்ந்து ஊக்கஞ் செய்யவேண்டும். இந்தியர்களும் நன்மை பயக்கத்தக்க மேனாட்டு ஸ்தாபனங்களுக்குத் தாராளமாய் உதவி செய்யவேண்டும். ஊணளித்தல் சிறந்த தர்மம். ஏனெனில் ஒருவன் தன் வயிற்றுக்கு மிஞ்சி உண்ணல் இயலாது. ஏழைகளுக்குப் பணமாவது சாமானாவது கொடுத்தலால் அவர்களுக்கு அவற்றை ஜாஸ்தியாய்த் தேடும் ஆசை விளைகின்றது. இது இந்தியர்களின் கொள்கை, இது இந்நாட்டு சாதாரண ஜனங்கள் ஒத்துக்கொள்ளத் தக்கது. ஆனால் கல்விகற்ற யூகிகள் தற்காலத்தில் சிறந்த தர்மமெது வென்பதை அறிந்து அதைச் செய்து வரவேண்டும்.

REVIEWS OF BOOKS.

புத்தகக் குறிப்புக்கள்.

1. விபூதிருத்திராக்ஷதாரண நிருபணம்:—இது இராஜமன்னார்குடி மகாமகோபாத்தியாயர் தியாகராஜ தீக்ஷிதரவர்களால் வடமொழியிலியற்றப்பட்ட **துர்ஜ்ஜநோக்தி நிராசம்** என்ற கிரந்தத்தின் மொழிபெயர்ப்பு. இத்தமிழ்நூலியற்றினோர் திருநெல்வேலி ஜில்லா விருதுபட்டி சிவஞான யோகிகள். இந்நூலின் விலை 14-அணா. வேண்டியவர்கள் கிரந்த கர்த்தாவிற்கு எழுதிப்பெறலாம்.

இந்நூலில் வேதம், உபநிடதம், புராணம் இதிகாசம், மிருதி முதலான 52 சாத்திரங்களிலுமிருந்து பிரமாணங்கள் கூறப்பட்டுள. வடமொழிச் சுலோகங்களையும் வாக்கியங்களையும் வரைந்து அவற்றிற்குத் தமிழில் மொழிபெயர்ப்பும் உரையும் சேர்க்கப்பட்டன. விபூதி உருத்திராக்ஷதாரண நிருபண விஷயத்தில் வீணுயெழுப்பிய ஆட்சேபங்களைக் கண்டித்து **தூஷண கண்டனம்** என்ற நூலொன்றை யெழுதி யதுவும் இதனுடன் சேர்க்கப்பட்டுளது.

விபூதி, நீறு, பசிதம், பஸ்மம், ரக்ஷை இவை ஒரு பொருட்கிளவிகள். 'பிரகாசிப்பிக்குந்தன்மையால் **பசித** மென்றும், பாவத்தைப் போக்குவதால் (நீறு) **பஸ்மம்** என்றும், மனிதர்களுக்குச் சம்பத்தைக் கொடுப்பதால் **பூதி** யென்றும், ரக்ஷிப்பதால் **ரக்ஷை** யென்றும் சொல்லப்பட்டது என்றார் நாரதமகரிஷி. பஸ்மம்=ஞானஜனகம்:= ஞானத்தையுண்டுபண்ணுவது. பஸ்மத்தினால் திரிபுண்டரத்தை (மூன்று வரியாய்ப் பூசும் விபூதிப் பூச்சு) த்தரிப்பவர் பாதகங்களினின்று நீங்கிப் பரிசுத்தர்களாகின்றார்களென்று வாமன புராணங்கூறும். கர்லாக்நி ருத்திரோபநிஷத்தும், ஜாபாலோப நிஷத்தும், அதர்வசிர சுருதியும், இதை வற்புறுத்துகின்றன.

உருத்திராக்க மகிமையைக் கூறும் நூல்கள் காருடம், மானவம், பாத்மம்,நாரதீயம், பராசரம், ஸ்காந்தம், வாசிட்டம், இலிங்கம்முதலியனவாம். ஜாபாலோபநிஷத்தானது ருத்திராக்ஷமாலையின் தாரணத்தைப்பற்றிச் சொல்லும்.

உருத்திராக்ஷத்தினுற்பத்தி அதைத் தரிப்பதனாலுண்டாம் பயன் இவற்றைக் குறித்து வினவிய புசுண்டருக்குப் பகவானான ருத்திரர் பின்வருமாறு விடையளித்தனர்.

"பூர்வத்தில் திரிபுரத்தைச் சங்காரஞ் செய்ய நான் கண்களை மூடினேன். கண்களினின்று நீர்த்துளிகள் பூமியில் விழுந்தன. அவை சகலருக்கு மநுக்கிரகஞ் செய்வதற்காக ருத்திராக்ஷ மரங்களாயின. ருத்திராக்ஷங்களைத் தரிப்பவர் பகற்செய்த பாவத்தை இரவிற்போக்கடிக்கும், இரவிற் செய்த பாவத்தைப் பகலிற் போக்கடிக்கும். அன்றியும்: அவற்றைப் பார்த்தால் லட்சம் பங்கு புண்ணியமும், தொட்டால் கோடிப்பங்கு புண்ணியமும், தரித்தால் அத்துணை நூறு கோடி புண்ணியமும் உண்டாகும். அவற்றைத்தரித்து ஜபிக்கின்றவர் ஆயிர லக்ஷங்கோடிப் புண்ணிய மடைகின்றார். உருத்திராக்ஷங்களில் நெல்லிக்காய்ப் பிரமாணமுள்ளன சிரேஷ்டம்; இலந்தைப்பழப் பிரமாணமுள்ளன மத்திமம், கடலைப்பிரமாணமுள்

ளன அதமம்; வெள்ளை வருணமுள்ளன பிராமண ஜாதி, சிவப்பு நிறமுள்ளன க்ஷத்திரிய ஜாதி, பொன்னிற முள்ளன வைசிய ஜாதி, கறுப்பு நிறமானவை சூத்திர ஜாதி. தாம்பிர நிறமுள்ளதும் அழகுள்ளதும் கெட்டியானதும் பருமனுனதும் முள்ளுகளோடே கூடியதுமான ருத்திராக்ஷங்கள் மேன்மையானவை. புழுக்கடி யுள்ளதும், வெட்டுப்பட்டதும், உடைந்ததும், முள்ளில்லாததும், நோய் கொண்டதும், உருண்டையல்லாததுமான ஆறுவித ருத்திராக்ஷங்களைத் தள்ளவேண்டும். தன்படியாய்த் துவாரத்தையுடைய ருத்திராக்ஷம் உத்தமம். மனிதனுற் றுளை செய்யப்பட்டன மத்திமம். உரை கல்லில் தங்க நிறமுள்ளது உத்தமமான ருத்திராக்ஷம். கழுத்து, தலை, பூணூல், காது, இரண்டு கை, இவைகளில் எதிலாவது நித்தியம் மிகுந்த பக்தியுடன் ருத்திராக்ஷந் தரிக்கவேண்டும். சிராத்தம், யஜ்ஞம், பிராயச்சித்தம், தேவபூஜை, ஹோமம், ஜபம், தீக்ஷாகாலம் இவைகளே அவை தரிக்கப் பெறுங்காலங்களாம்."

பஸ்மத்தூளனம், பஸ்மத்தால் திரிபுண்டர தாரணஞ் செய்தல், ருத்திராக்ஷமாலையைத் தரித்தல், இவை முத்திசாதனத்தில் புத்தியுடையவனுக்கு சாந்தி முதலியன வுண்டு பண்ணுகின்றனவென்று சூதசம்மிதை கூறு நிற்கும். இவை பரம ஔஷதங்களாம் என்பதைக் **கண்டனம் 64-67-**ம் பக்கங்களிற் காண்க.

2. துகளறுபோதம். இதனை அருளிச்செய்தவர் ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகட்கு முன்னரிருந்த சீகாழிச் சிற்றம்பல நாடிகள். திருநெல்வேலி சரசுவதிவிலாஸ சபையின் காரியதரிசி S. பால் வண்ண முதலியாரவர்கள் இதனைப் பரிசோதித்து தூத்துக்குடி திருஞான சம்பந்த சுவாமிகள் மடாலய சைவசித்தாந்த சபையார் மூலமாகப்பதிப்பித்தனர். இந்நூலினையே தமிழ்ப்பண்டிதர் நாகை-வேதாசலம்பிள்ளை யவர்கள் தாமெழுதிய புத்துரையோடு ஆறுவருஷங்கட்கு முன்னர்த்தாம் நடத்திவந்த சித்தாந்த ஞானபோதம் என்னும் பத்திரிகையின் முதற்சஞ்சிகையுள் பதிப்பித்துள்ளார். அதனுள் நூலாசிரியர் காலமுதலியனவும் வரையறுத்துரைக்கப்பட்டது.

இந்நூலில் நூறுவெண்பாக்களுள. பஞ்சபூதப்பழிப்பு, பொறியற வுணர்தல், அந்தக்கரணசுத்தி, கலாதி ஞான நிராகரணம், சுக தத்துவதூடணம், தத்துவாதீதம், சகல தரிசனம், கேவலம், கேவலதரிசனம, கேவலாதீதம், தன்னுண்மை, சைதன்னியதரிசனம், ஞான தரிசனம், பரைதரிசனம் பரையில்யாத்தம், பரையோகம், சுத்தபரயோகம், சுத்த பரபோகம், சாக்கிராதீதம், சுத்தாவத்தை, சுகரூபம், சுகாதீதம், சுகப்பேறு, பரமானந்ததரிசனம், பரமானந்தயோகம், ப. போகம், ப. மேலீடு, ப. அவசம், பஞ்சாக்ஷர தரிசனம், குரு சீஷ விலக்கணம், யோக நிலை, கிரியா மார்க்கம், சரியா மார்க்கம் இவையே இதனுட் பொருந்திய விஷயங்கள். தத்துவயோக ஞானவழிகளைச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் இந்நூலினின்று மாதிரிக்காக குருபணி செய்வாரை வழிபடற்குரிய வெண்பாவை இவண் தருகின்றாம்:-

" கருவேலை தன்னைக் கடப்பருலகின்
மருவாத வின்பத்துள் வைத்த—குருவி
னடியா ரடியா ரடியா ரடியா
ரடியாரைச் சார்ந்த வவர்."

ஏஜெண்டுகள்:— தமிழ் வழங்கிவரும் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏஜெண்டுகள் தேவை. ஏஜெண்டுகளாகப் பிரிய முள்ளவர்கள் தங்களுடைய நற்சாட்சிப் பத்திரங்களை "கோயமுத்தூரிலுள்ள ஞான போதினிப் பத்திராதிபருக்கு அனுப்பினுல் அவர் பதிலெழுதுவர். வருஷந்தோறும் சந்தாதாரர்களைச் சேர்த்து சந்தாவை வசூலித்து அனுப்பும் ஏஜெண்டுகளுக்கு ரூபாய்க்கு இரண்டு அணு கமிஷன் கொடுக்கப்படும். இந்தக்கமிஷனும் மூன்று மாதங்கட்கு ஒரு தரம் ஏஜெண்டுகளுக்கு அனுப்பப்படும். குறைந்தது 10 சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்பும் ஏஜெண்டுகட்கு மாத்திரமே ஒவ்வொரு மாதச் சஞ்சிகையும் இனமாக அனுப்பப்படும்.

தெரிந்தெடுக்கப்பட்ட ஏஜெண்டுகளின் விலாசம்.

திருநெல்வேலி ஜில்லா—Mr. T. P. முத்து வேலுப்பிள்ளை, சுந்தரமூர்த்தி அண்டு கம்பெனி, திருநெல்வேலி ரெயில்வே ஸ்டேஷன்.

திருநெல்வேலிப் பட்டணம்—Mr. T. V. சிதம்பரம் பிள்ளை, கல்லத்தி முடுக்கு, திருநெல்வேலி.

சாத்தூர்—Mr. S. A. சோமசுந்தரம் பிள்ளை, சாத்தூர்.

கொழும்பு—Mr. K. பூர்ணலிங்கம் பிள்ளை, ஆடம் ஜிவல்ஜி, கொழும்பு.

மதுரை—Mr. O. ஆனையப்ப பிள்ளை, பெரிய குளம், Via அம்மையநாய்க்கனூர்.

விளம்பர விகிதம்—ஒரு வருஷத்திற்கு ஒரு பக்கத்திற்கு ரூ. 18 அரை வருஷத்திற்கு ரூ. 10 மூன்று மாதத்திற்கு ரூ. 6

ஷை அரைப்பக்கத்திற்கு	ரூ. 10	ஷை ரூ. 6	ஷை ரூ. 4
ஷை மூன்றிலொரு பக்கத்திற்கு	ரூ. 7	ஷை ரூ. 4	ஷை 3

இதற்குக் குறைந்த விளம்பரங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. **"ஞான போதினிப் பத்திராதிபர், கோயமுத்தூர்"** என்ற விலாசத்திற்கு எழுதிக் கொள்க.

பத்திராதிபர் புதிதாகப் பதிப்பித்த புத்தகம்.

Shakespeare's Twelve Great Heroines.

ஷேக்ஸ்பியர் பன்னிரு பெண்மணிகள்.

நல்ல கிளேஸ் கடிதத்தில் புதிய அச்செழுத்தில் பதிப்பிக்கப்பட்டது. விலை அணு 6. பத்துப்பிரதி வாங்குவோருக்கு ஒரு பிரதி இனம். சென்னை தம்புசெட்டிதெரு, ரிப்பன் புத்தக சாலைக்கும், மவுண்டுரோடு, ஹிங்கன்பாதம் கம்பெனிக்கும் எழுதிப் பொற்றுக் கொள்ளலாம்.

BY THE EDITOR

A Primer of Tamil Literature

(In English.)

Will be ready for sale in the first week of May.

Price Re. 1-0-0.

Those who register their names before the 20th April will be charged only 12 annas. Look Sharp. Apply to the Editor of this Journal.